TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

ஆகஸ்ட் 2025

தீபம் 14 சுடர் 3

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## அன்னை மரியாள்
## சுதந்திரத்தின் தாய்

# தீபகத்திலிருந்து இறையாசீர்

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,



## அன்னை மரியாள் சுதந்திரத்தின் தாய்!

இன்றைய உலகில், சுதந்திரம் என்பது தான் விரும்பியவற்றை செய்தல் என்று தவறாக புரிந்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் அன்னை மரியாள், உண்மையான கிறிஸ்தவ சுதந்திரத்தின் ஒளியாக திகழ்கின்றார். அதாவது கடவுளுக்காக "ஆம்" எனச் சொல்லும் சுதந்திரம். அன்பு, அர்ப்பணம் மற்றும் பிறருக்காக பணி செய்து வாழும் சுதந்திரம்.

கபிரியேல் தூதர் நாசரேத்தில் வாழும் மரியாள் என்ற கன்னியிடம் வந்து, "அருள் மிகப் பெற்றவரே வாழ்க" என்று வாழ்த்தி கடவுளின் தாயாகும் திட்டத்தை, அறிவித்தபோது கன்னி மரியாள் "இதோ ஆண்டவரின் அடிமை, உமது வார்த்தையின்படி எனக்கு ஆகட்டும்" (லூக். 1: 38) என்ற அவரின் "ஆம்" "FIAT" என்பது அடிமைத்தனம் அல்ல, மாறாக அது ஒரு வீரமான, செயல்படும் சுதந்திரம். இது நம்பிக்கையுடன் கடவுளின் திட்டத்தில் பங்கேற்கும் சுதந்திரம்.

எழுபத்தெட்டாவது (78) ஆண்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நம் நாட்டில், இளைஞர்களுக்கு அன்னை மரியாள் உண்மையான சுதந்திரம் என்பது "தான்" விரும்பியவற்றையெல்லாம் செய்வது என்பதல்ல, மாறாக நாம் செய்யும் ஒவ்வொரு செயல்பாடுகளையும் தீர சிந்தித்து, தேர்வு செய்து, நற்செயல்களில் ஈடுபடுவதில் உள்ளது என நமக்கு கற்பிக்கின்றார். இந்த செயல்பாடுகள் நம்மை புனிதராகவும், பிறருக்கு உதவி புரிவதிலும் அதிலும் சிறப்பாக பிறருக்கு வாழ்வளிக்கவும் இட்டுச் செல்ல வேண்டும்.

கிறிஸ்தவ குடும்பங்களில் வாழும் நமக்கு சுதந்திர அன்னை மரியாள், **"சுதந்திரம்"** என்பது குடும்பத்தில் நம்பிக்கையுடன் வாழ்வது, எதிர்நோக்குடன் அன்றாட கடமைகளைச் செய்வது, எந்த துன்பம் வரினும் மன உறுதியுடன் எதிர்க்கொள்வது என்கின்ற கிறிஸ்துவ பண்புகளில் அதிலும் சிறப்பாக, மகிழ்வுடனும், பொறுப்புடனும் சவால்களை எதிர்க்கொள்வதிலும் நம் சுதந்திரம் இருக்கின்றது என கற்பிக்கின்றார். சிலுவையின் அடியில் அன்னை மரியாள் நின்று, அன்பில் பிறந்த சுதந்திரம் துன்பத்திலும் நிலைத்து நிற்கும் என்பதை யோவான் 19: 25ல் நமக்கு கற்றுக் கொடுக்கின்றார்.

புனிதர் இரண்டாம் ஜான்பால், அன்னை மரியாளைப் பற்றி குறிப்பிடும்போது, "மரியாள் சுதந்திரத்தின் மிக உயர்ந்த வெளிப்பாடு எனவும், ஒரு பெண்ணாக சுதந்திரம் என்பது கடவுளுக்குக் கீழ்ப்படிந்து, அவரின் விருப்பப்படி நடப்பதே" என்று தெளிவாக வாழ்ந்துக் காட்டியுள்ளார் எனக் கூறுகின்றார்.

இளைஞர்களுக்கும், குடும்பங்களுக்கும் இந்த 'சுதந்திர நாளில்" நாம் கற்றுக் கொடுக்க வேண்டியது, அன்பும், உண்மையும், நீதியும், சமத்துவமும் நிறைந்த வாழ்வு ஒன்றே உண்மையான சுதந்திரம் என்று கற்பிப்போம், அதன்படி வாழ்வோம்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 02.08.2025 | அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி - திருப்பலி | 02 |
| 03.08.2025 | பொதுக்காலம் 18ம் ஞாயிறு - திருப்பலி | 03 |
| 05.08.2025 | தூய கன்னி மரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு - திருப்பலி | 05 |
| 06.08.2025 | ஆண்டவருடைய தோற்ற மாற்றம் - திருப்பலி | 06 |
| 10.08.2025 | பொதுக்காலம் 19ம் ஞாயிறு - திருப்பலி | 07 |
| 15.08.2025 | புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா மற்றும் இந்திய சுதந்திர தினவிழா - திருப்பலி | 08 |
| 17.08.2025 | பொதுக்காலம் 20ம் ஞாயிறு - திருப்பலி | 10 |
| 22.08.2025 | அரசியான கன்னி மரியா - திருப்பலி | 11 |
| 24.08.2025 | பொதுக்காலம் 21ம் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 25.08.2025 | அருளாளர் மரிய ட்ரொங்காட்டி - திருப்பலி | 13 |
| 26.08.2025 | அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா - திருப்பலி | 14 |
| 27.08.2025 | புனித மோனிக்கா - திருப்பலி | 16 |
| 29.08.2025 | திருமுழுக்கு யோவானின் பாடுகள் - திருப்பலி | 17 |
| 31.08.2025 | பொதுக்காலம் 22ம் ஞாயிறு - திருப்பலி | 18 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| மரியாவின் விண்ணேற்பும் - விடுதலையும் | 19 |
| அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா - வாழ்வு தரும் பாடம் | 21 |
| புனித மோனிக்கா தந்த புனித அகுஸ்தினார் | 24 |
| திருஅவைச் செய்திகள் | 26 |

# பகுதி 1 : வழிபாட்டு வழிக்காட்டி

| 02.08.2025 | அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்*

அகஸ்துஸ் சர்தோரிஸ்கி 1858ம் ஆண்டு ஆகஸ்டு 2ம் நாள் பிரான்ஸ் நாட்டில் பாரீஸ் நகரில் ஓர் அரச குடும்பத்தில், லடிஸ்லாஸ், மரிய அம்பாரோ என்னும் தம்பதியருக்கு முதல் பிள்ளையாகப் பிறந்தார். இவர் தனது 6ம் வயதில் தாயை இழந்தார். அரச குடும்பத்தில் பிறந்தவராயினும் இறைவனுடைய அழைத்தலை ஏற்றுக்கொண்டு அவர் மட்டும் போதும் என்று அனைத்து வசதிகளையும், ஆடம்பர வாழ்க்கையையும் துறந்த இவரது வாழ்வு இவரின் புனிதத்திற்குச் சான்றாகும். சலேசிய சபையில் சேருவதற்கு முன்னரே இவரது நுரையீரல் பாதிக்கப்பட்டதால் இவர் பெரிதும் துன்பப்பட்டார். ஆனால் இறைவன்மீது கொண்டிருந்த ஆழ்ந்த அன்பின் காரணமாக அனைத்தையும் தாங்கிக்கொண்டார். இவர் தம் இளம் வயதிலேயே ஆழ்ந்த விசுவாசமும், பக்தியும் கொண்டு விளங்கி நற்கருணை, ஒப்புரவு அகிய திருவருட்சாதனங்களைப் பக்தியோடு பெற்று வந்தார். தினமும் பாடுபட்ட சிலுவைக்கு முன்பு தியானத்தில் ஈடுபட்டு வந்தார். வேலையாட்களிடம் கனிவன்புடன் நடந்துக்கொண்டு அனைவரது நன்மதிப்பையும் பெற்றார்.

தனது 20ம் வயதில் உலகப் பற்றுகளை வெறுத்து துறவியாக வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தபோது தூய ஜான்போஸ்கோவின் சந்திப்பு இவரைக் கவர்ந்ததால் அவருடன் தங்கினார். தனது 29ம் வயதில் திருத்தந்தை 13ம் சிங்கராயரின் பரிந்துரையின் மூலம் சலேசிய சபையில் சேர்ந்தார். அவரைப்பற்றி அவரது துறவற பயிற்சியாளர் தொன் பர்பேரிஸ் கூறும்போது "புனிதராவதற்கான எல்லா தகுதியும் இவரிடம் காணப்பட்டன," என்றாராம். இறைவனோடு என்றும் ஒன்றித்திருக்க மனவல்லிய செபங்களை அடிக்கடி சொல்வாராம். இவரை எப்படியாவது வீட்டிற்குக் கொண்டுவந்துவிட வேண்டும் என்று இவரது குடும்பத்தினர் தொல்லைகள் பல கொடுத்துவந்த போதும் அனைத்தையும் பொறுமையுடன் தாங்கிக்கொண்டாராம். இவர் சலேசிய சபையில் சேருவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டார் என்று அவரது குடும்பம் எழுப்பிய குற்றச்சாட்டை மறுத்து "நான் என்ன செய்கின்றேன் என்று எனக்குத் தெரியும், யாரும் என்னை கட்டாயப்படுத்தவில்லை. தொன் போஸ்கோ உயிருடன் இருந்தபோது அவரை நான் அன்பு செய்தேன். அவரது சபையை நான் உயர்வாக எண்ணுகிறேன்", என்று கூறினாராம்.

"நீ விரைவில் குருவாக திருநிலைப்படுத்தப்படுவாய், உலகிற்கு நல்லதைச் செய்வாய்", என்ற புனித தொன் போஸ்கோவின் வாக்கு 1892ம் ஆண்டு ஏப்ரல் 2ம் நாளன்று நிறைவேறியது. ஆனால் தனது குருத்துவ வாழ்வின் ஓராண்டிலேயே, அலாசியா என்ற இடத்தில், 1893ம் ஆண்டு ஏப்ரல் 8ம் நாள் புனித சனியன்று மாரடைப்பால் மண்ணுலகைவிட்டு விண்ணுலகில் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடச் சென்றார். அகஸ்துஸ் தனது வேதனையிலும் சாந்தமுடன் இருந்து, இவ்வுலகப் பற்றற்றவராகக் காணப்பட்டார். இறைவனோடு ஒன்றித்து, இறைச்சித்தத்திற்கு பணிந்து, இயேசுவின் பாடுகளோடு, தன்னுடைய நோயினால் ஏற்பட்ட துன்பங்களை

இணைத்து, பொறுமையிலும், அமைதியான மனநிலையிலும், இறையன்பிலும் ஆழமாக வளர்ந்து புனிதத்தின் உயர்ந்த நிலையை அடைந்தார் என்று கூறினார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2004ம் ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் இறைவன்மீது ஆழ்ந்த விசுவாசமும் பக்தியும் கொண்டவர்களாக வாழ இத்திருப்பலியில் பங்குகொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே, திருஅவையை வழிநடத்தும் அனைத்து தலைவர்களும் மறுகிறிஸ்துவாக மாறி அவரின் விழுமியங்களைக் கடைப்பிடித்து புனிதர்களைப்போல உலகிற்கு சான்று பகர்ந்து வாழவும், உம் படைப்பாகிய நாங்கள் உம்மையும், எம் சகோதர சகோதரிகளையும் அன்பு செய்து வாழவும், உம்முடைய நோக்கத்தை நிறைவேற்றவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. எம் சலேசிய குடும்பங்களின் அங்கத்தினர்கள் அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கியின் பாதையில் நடந்து, அன்பு செய்து, ஏழை எளிய, கைவிடப்பட்ட இளம் உள்ளங்களின் வளர்ச்சிக்காக தங்களையே கையளிக்கவும், உமக்கேற்ற பாதையில் அவர்களை வழிநடத்தும் அனைத்து ஆற்றலையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இளையோர் அனைவரும் உமது நற்செய்தியைக் கடைப்பிடித்து, பிறருக்குச் சாட்சிகளாக வாழவும், தோல்விகள் வந்தாலும் துவண்டுவிடாமல் மீண்டும் எழுந்து தங்களின் இலட்சியத்தை நோக்கிப் பயணம் செய்ய உம் தூய ஆவியின் வல்லமையால் அவர்களை வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. இங்கு கூடியுள்ள நாங்கள் அனைவரும் தூய ஆவியின் ஏவுதலுக்கேற்ப வாழ்ந்து, கிறிஸ்துவின் விழுமியங்களை எங்களது வாழ்வில் கடைப்பிடித்து, சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நிலை நாட்டவும், ஒருவரையொருவர் அன்பு செய்து உமக்கேற்ற மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

| 03.08.2025 | பொதுக்காலம் 18ம் ஞாயிறு | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *சஉ. 1: 2, 2: 21-23* II. *கொலோ. 3: 1-5, 9-11* *லூக். 12: 13-21*

பொதுக்காலம் 18ம் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வந்திருக்கும் இறைமக்களாகிய உங்கள் அனைவரையும் வாழ்த்துக் கூறி வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம். முதல் வாசகத்தில் "வீண் முற்றிலும் வீண்" என்கிறார் சபை உரையாளர். ஞானத்தோடும் அறிவாற்றலோடும் திறமையோடும் ஒருவர் உழைக்கிறார். உழைத்துச் சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவர்களுக்கு விட்டுச் செல்கிறார். அவரது உழைப்பு வீண் என்று கூறுகிறார். இரண்டாம் வாசகத்தில் நாம் கிறிஸ்துவோடு இணைந்து

உயிர்பெற்றதன் அடையாளம் மேலுலகு சார்ந்தவற்றை நாடவேண்டும் என்பதாகும். இவ்வுலகு சார்ந்த பரத்தமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீயநாட்டம், பேராசை ஆகியவற்றை ஒழித்துவிட்டு புதிய மனித இயல்பை அணிந்துக்கொள்ள பவுலடிகளார் அழைக்கிறார்.

நற்செய்தியில் மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் செல்வம் அதிகம் வைத்திருப்பவர்கள் விண்ணக வாழ்வில் நுழையமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. எனவேதான், உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு என்று பணக்கார இளைஞரிடம் ஆண்டவர் சொன்னவுடன் அவன் முகவாட்டத்துடன் சென்றான். பொன்னையும் பொருளையும் மிகுதியாயச் சேர்ப்பதால் உங்களுக்கு நிலைவாழ்வு வந்துவிடாது பிறரோடு பகிர்ந்து வாழ்ந்து புண்ணியங்களைச் சேர்க்கும்போது நிலைவாழ்வு உங்களுக்கு வரும் என்று இயேசு கூறுகிறார். "ஆண்டவர் இயேசுவே என் ஒப்பற்ற செல்வம்" என்னும் பவுலடியாரின் வார்த்தைகளை நினைவுக் கூர்ந்து நம் கடவுளைத் தவிர இவ்வுலகில் மிகப் பெரிய செல்வம் எதுவுமில்லை என்று உணர்ந்து பகிர்வு வாழ்வு வாழ்ந்து பேராசையைத் தவிர்த்து இறைவனின் வார்த்தைமீது நம்பிக்கை வைத்து அவரது அன்பில் நிலைத்திருக்க வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கோட்டையும் அரணுமான இறைவா, எங்கள் திருத்தந்தை லியோ, ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர்கள், பொதுநிலையினர் அனைவரையும் உம் திருப்பாதத்தில் ஒப்படைக்கின்றோம். அவர்களது நற்செய்தி அறிவிக்கும் பணி நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளாய் பலன்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அரசர்களுக்கெல்லாம் அரசரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் தங்களின் குடும்பங்களையும், உறவுகளையும், சொத்துக்களையும் சேர்ப்பத்தில் ஆர்வம் காட்டாமல் மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை ஏற்படுத்தி, ஏழை மக்களை முன்னேற்ற பாதையில் நடத்திடவும், அவர்களை அமைதி வழியில் கொண்டுச் செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. எல்லாம் வல்லவரே எம் இறைவா, குடும்பங்களை உமது பாதம் ஒப்படைக்கின்றோம். இன்றைய காலச்சூழலில் அழிந்துப்போகும் செல்வத்திற்காக தங்களையும், உறவுகளையும் இழந்துவாடும் இந்நாள்களில் எங்களில் அழிந்துபோகாத செல்வம் நீர் ஒருவரே என்பதை நாங்கள் உணர்ந்து உம்மில் ஒன்றித்து வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. பாதுகாத்து பராமரிப்பவரே, இன்று கல்விப்பயிலும் மாணவ மாணவிகளை உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தன்னுடன் பயிலும் மாணவிகளும், மாணவர்களும் ஏற்றத்தாழ்வுகளைப் பாராமல், ஒரே தோழமையுணர்வுடன் பழகும் நல்லுள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 05.08.2025 | தூய கன்னி மரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திரு. ஜான் சுரேஷ்*

இறையேசு கிறிஸ்துவின் அன்புக்குரியவர்களே, இன்றைய நாளில் நாம் அனைவரும் கன்னிமரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு திருப்பலியில் கலந்துக்கொள்ள ஒன்றுக் கூடியுள்ளோம். லிபேரியுஸ் திருத்தந்தையாக இருந்த காலத்தில் (352-366) உரோமையில் வாழ்ந்த யோவான் என்பவர் குழந்தை இல்லாமல் இருந்தார். தனக்கான வாரிசு வேண்டி இவரும், இவரின் மனைவியும் அன்னை மரியிடம் இடைவிடாது செபித்தார்கள். குழந்தை வரம் தந்தால் தங்கள் சொத்துக்களை அன்னை கன்னிமரியின் பெயர் விளங்க பயன்படுத்துவதாக நேர்ச்சை வைத்தார்கள். ஆகஸ்டு மாதம் கடுமையான வெயில் அடிக்கும் மாதம். ஆனால் அன்னையின் புதுமையால் திரு. யோவான் அந்த எஸ்கலின் மலையில் எங்கு திருத்தலம் எழுப்ப வேண்டுமோ அந்த இடத்தில் மட்டும் அன்னை பனிமழைபொழிய செய்து திரு. யோவானுக்கு அடையாளம் காட்டினார். திரு. யோவான் அந்த அதிசயத்தை திருத்தந்தையிடம் கூறி, அதனைப் பார்த்த திருத்தந்தையும் அன்னையின் அற்புதத்தினை ஏற்றார்.

அன்னையின் காட்சியையும், வேண்டுதலையும் திருத்தந்தை லிபேரியுசிடம் தெரிவித்தார். அதனை ஏற்ற திருத்தந்தை அன்னைக்கு ஓர் பேராலயம் எழுப்ப அனுமதியளித்தார். 431ம் ஆண்டு எபேசு நகரில் திருச்சங்கம் கூடியது. அச்சங்கம் அன்னை கன்னிமரியா இறைவனின் தாய் என்று அறிக்கையிட்டது. இதனை நினைவு கூறும் விதமாக திருத்தந்தை சிக்ஸ்துஸ் அப்பேராலயத்தை புதுப்பித்து அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்தார். இறைவனின் தாயாம் அந்த அன்னை மரியாயிடம் நம் குடும்பத்தையும் ஆசீர்வதிககும்படி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உம்மையே எமக்காக கையளித்த இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் நீர் பகிர்ந்த சான்றுக்கேற்ப இரக்கத்தின் ஆண்டில் உறுதியோடு வாழ தேவையான அருளைப்பொழிய வேண்டுமென்று தூய கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. நிலைவாழ்வை பொழியும் வள்ளலே இறைவா, உம்மால் வாழ்வளிக்கப்பட்ட நாங்கள் அனைவரும் நீர் ஒருவரே எங்கள் தஞ்சம் என்பதை உணர்ந்து உம்மோடு இணைந்திருப்பதே எங்கள் வாழ்வின் இலக்காக கொண்டு உம்முடைய வழிகாட்டுதலின்படி வாழ்ந்து உம்மீது விசுவாசத்தில் நிலைத்து நிற்கின்ற மக்களாக வாழ வரமருள தூய கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் இறைவா, இங்கு கூடியுள்ள நாங்கள் அனைவரும் அன்னை மரியாளைப்போன்று கிறிஸ்துவுக்கு ஏற்ற பிள்ளைகளாக வாழ்ந்து அதன்மூலம் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும் என்று தூய கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

| 06.08.2025 | ஆண்டவருடைய தோற்ற மாற்றம் | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. ராணிவில்சன்*

I. *தானி 7: 9-10, 13-14* II. *2பேதுரு 1: 16-19* *லூக் 9: 28-36*

உயிராய் உறவாய் இறைவனுக்குள் இணைந்து திருப்பலி நிறைவேற்ற வந்திருக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் விழா வாழ்த்துக்களும், செபங்களும். இயற்கையோ மனிதமோ அந்தந்த காலகட்டத்திற்கேற்ப மாற்றம் அடைவது அவசியமாகிறது. செடி, கொடி, மரம் போன்றவைகள் வளரவளர மாறி பலன் தருகின்றன. ஆணோ பெண்ணோ ஒவ்வொரு நிலையிலும் மாற்றங்கள் அடைந்து தம் இயல்பில் பயணித்து முழுமையடைகின்றனர் ஆக மாற்றல்கள் அவசியம். இதை இறையேசு தன் உருமாற்றம் வழியாக உணர்த்துகிறார். இத்திருநாள் கி.பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. கீழத் திருஅவையில் ஆர்மினியர்கள் மூன்றுநாள் கொண்டாட்டமாக ஆறு நாட்கள் உண்ணா நோன்புக்குப் பின் கொண்டாடினர். மேலத் திருஅவையில் கி.பி. 9ம் நூற்றாண்டில் கொண்டாடினர். கி.பி. 1456ல் திருத்தந்தை 3ம் கலிகடசு துருக்கியர்மீது அடைந்த வெற்றியின் நினைவுச் சின்னமாக இத்திருநாளைக் கொண்டாடப் பணித்தார் (மாற்கு 9:1-8) உருமாற்ற நிகழ்வு ஏன் நிகழ்ந்தது?

நமது மீட்புக்காக இறை இயேசு ஏற்ற பாடுகள், சிலுவை, மரணம் இவற்றிற்குச் சாட்சிகளாக மாறப்போகும் திருத்தூதர்கள் (சீடர்கள்) மனம் வேறு திசைக்கு மாறிப் போகக் கூடாது என்பதற்காக, தம் தெய்வீக மகத்துவத்தை பாடுகளுக்குமுன் வெளிப்படுத்துகிறார். அவர்கள் மட்டுமல்ல இன்று நாமும் நம்பிக்கையில் நிலைத்து நின்று வான் வீட்டின் மணிமுடி பெறவே இவ்விழா.

**முதல் சீடத்தியாக உள்ள அன்னையின் உருமாற்றம் பற்றி பார்ப்போம்**

| | |
|---|---|
| ஆகட்டும் | கையளித்த மாற்றம் |
| எலிசபெத் | விரைந்து நற்செய்தி திருத்தூது மாற்றம் |
| கானாவூர் | நல்ல சேவை மறைசாட்சியாக மாற்றம் |
| சிலுவையடியில் | சாகாமல் மறைசாட்சியாக மாற்றம் |
| பெந்தகோஸ்தே | இறை வேண்டலில் திருத்தூதரோடு இணைந்து பங்கேற்று தலைமை ஏற்று திருஅவைக்கு அன்னையாக மாற்றம் |

இவற்றையெல்லாம் தியானித்து இந்த அரிய பண்புகளை நாமும் ஏற்று இறையேசுவோடு இணைந்திடுவோம். பழையவைகளை களைந்திடுவோம். இறைச் சாயலை ஏற்று மாறுவோம், என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர்கள் இறை இயேசுவின் உருமாற்றத்தில் பங்கேற்று முழுமையாக

தம் சேவைகளில் குறுக்கிடுகின்ற சவால்களை முறியடித்து ஒருவர்கூட வீணாகாமல் அனைவரும் வான் வீட்டின் மணிமுடி தரிக்க அருள் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மேகமாக நிழலிட்டவரே, எங்கள் குடும்பங்கள் தீய எண்ணங்களில், தீய நாட்டங்களில் மூழ்கிவிடாமல் இறை இயேசுவின் அணிகலன்களை அணிந்து மாற்றம் பெற்று நம்பிக்கையின் மக்களாக வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. இறுதிவரை உறுதி தேவை என்றவரே, பள்ளி கல்லூரிகளில் இன்றைய சூழலில் பல்வேறு அழுத்தங்களால் மாணவ மாணவிகள் தவறான வழியில் சென்று தம்முயிரை மாய்த்துக்கொள்கின்றனர். இன்னிலை மாறவும் மனஅழுத்தம், மனஉளைச்சல் இல்லாமல் கல்வி கற்கவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. பாகுபாடு உங்களிடையே கூடாது என்றவரே, பலவிதங்களில் துன்புறும் சிறுபான்மையினர்களைக் கண்கொண்டு பாரும் பச்சிளங் குழந்தை முதல் பெண்கள் வரை பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகி பலியாகின்றனர். இறைவா, உலகெங்கும் சமய நல்லிணக்கமும், மனித நேயமும் மாண்பும் மக்களின் உள்ளங்களில் புத்துயிர் பெற வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

| 10.08.2025 | பொதுக்காலம் 19ம் ஞாயிறு | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திரு. சாம்சன்*

I. *சாஞா. 18: 6-9* II. *எபி. 11: 1-2, 8-19* *லூக். 12: 32-48*

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று பொதுக்காலம் 19ம் ஞாயிறைச் சிறப்பிக்க ஒன்றுக் கூடியுள்ளோம். இன்றைய திருப்பலியில் இரண்டு வாசகங்களும் இறைவனின் வாக்குறுதியையும், அந்த வாக்குறுதியில் நாம் கொள்ள வேண்டிய நம்பிக்கையைப் பற்றிப் பேசுகின்றன. நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கியிருப்பவை, கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்கு புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை என்றும் கூறுகின்றது. நற்செய்தி வாசகமும் சீடர்களிடம் இருக்கவேண்டிய பண்புகளான நற்செய்தி அறிவிப்புப் பணி, குணப்படுத்தும் பணி, இறைமொழி அறிவு, பொது அறிவு, மறையறிவு போன்ற பண்புகள் மக்களின் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் அமைந்தன. இயேசு தம் சீடர்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பல உவமைகளைக் கூறுகிறார். உதாரணமாக நம்பிக்கைக்குரிய வீட்டுப் (திருஅவையின்) பொறுப்பாளர்போல நடக்க வேண்டுமென்பது இயேசுவின் விருப்பம்.

அவரது இல்லமாகிய திருஅவையை சீடர்கள் நன்கு பராமரிக்க வேண்டுமென்பது அவரின் விருப்பம். கடவுளின் பணியை மேற்கொள்ளும் சீடர்களுக்கு ஏற்ற வேளையில், உணவும் அவர்கள் நலனில் அக்கறையும் காட்ட வேண்டும். இந்த கடமையும், பொறுப்பும் அதிகம் இருக்க வேண்டியது திருஅவையை வழிநடத்தும் தலைவர்களுக்கு. அவர்கள் மனம்போன போக்கில் சென்று தங்களுடைய வசதியைக் கவனிப்பதிலேயே காலத்தை

செலவிடலாகாது. நற்செய்தியில் கூறியபடி மிகுதியாக கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாக எதிர்ப்பார்க்கப்படும் என இயேசு கூறினார். கடவுள் நமக்குக் கொடுத்துள்ள கொடைகளும், திறமைகளும், பொறுப்புகளும் பிறருடைய நலனுக்குப் பயன்படவேண்டு மென்றும் அவரிடமிருந்து பெற்ற அனைத்தையும், மற்றவர்களின் வாழ்வில் நமது வாழ்வின் மூலம் இறைவனின் அருள் பிரதிபலிக்கும்படி நாம் வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனாம் எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்களின் மேலான கடமையான மறைப்பரப்பும் பணியை தாராளமாய் செய்யவும், அவர்களின் வாழ்வில் ஏற்படும் இடையூறுகள், இன்னல்கள், சிக்கல்கள், பிரச்சனைகளிலிருந்து விடுவித்து உம் தூய ஆவியின் கொடைகளை நிறைவாக அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மக்களின் தேவைகளைப் புரிந்துக்கொண்டு, நிறைவேற்றும் முயற்சியை மேற்கொள்ளவும், அவர்களுக்காக தாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதையும் உணர்ந்து அவர்களின் வாழ்வாதாரம் செழிக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நலமளிக்கும் நாயகரே எம் இறைவா, வறுமையினாலும், முதுமையினாலும், இயலாமையினாலும் வருந்தும் உம் மக்களைக் கண்ணோக்கும். இருந்தும் இல்லாமல் வாழும் நிலைமாறி அனைத்தும் அனைவருக்கும் கிடைக்கப்பெற்று நிறைவான மகிழ்வோடு உம்மில் இணைந்து, உம்மைப் பின்பற்றி வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்றவரே, இன்றைய காலத்தில் வளரும் குழந்தைகள் தங்களின் சுய சிந்தனையோடு பெரியவர்களின் அறிவுரையை கேளாமல், தங்களின் மனம்போன போக்கில் வாழ்வை சீரழித்துக்கொள்கின்றனர். இந்நிலைமாறி உம்மைவிட்டு விலகாமல், என்றும் உம்பாதையில் நாளும் தங்களை அர்ப்பணித்து வாழும் நல்ல ஞானத்தை இவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 15.08.20025 | புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா மற்றும் இந்திய சுதந்திர தினவிழா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

I. *யோவா. 11: 19,12: 1-6* II. *1கொரி. 15: 20-26* *லூக். 1: 39-56*

உயிர்த்த ஆண்டவர் இயேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, இறைவனின் திருவுளப்படி இயேசுவின் தாய் மரியா, இவ்வுலக வாழ்க்கைப் பயணம் நிறைவுற்றதும், உடலோடும், ஆன்மாவோடும் விண்ணக மாட்சிக்கு அழைத்துக் கொள்ளப்பட்டார். வானதுாதர்களின் ஆர்ப்பரிப்போடு

விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதை நமது தாயாம் திருஅவை கடன் திருவிழாவாகக் கொண்டாடுகின்றது. இப்பெருவிழா பாரம்பரியமாகக் கீழத்திருச்சபையில் நான்காம் நூற்றாண்டிலிருந்தே "டார்மிஷன்" என்ற பெயரில் கொண்டாடப்பட்டது. டார்மிஷன் என்றால் "அன்னை மரியாள் ஆண்டவரில் ஆனந்தம் கொள்கிறார்" என்ற பொருளாகும். திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதர் 1568ம் ஆண்டு அனைத்துலக திருஅவை இவ்விழாவைக் கொண்டாட அனுமதி அளித்தார். பழைய ஏற்பாட்டில் ஏனோக்-365 ஆண்டுகள் வாழ்ந்து நடந்து கொண்டிருந்தபோது இறைவன் அவரை எடுத்துக் கொண்டார் (தொநூ 5:23-24). யோர்தான் நதிக்கரையில் இறைவாக்கினர் எலியா, எலிசாவோடு நடந்துக் கொண்டிருந்தபோது விண்ணிலிருந்து வந்த நெருப்புத் தேரும் குதிரைகளும் அவரை மேலே எடுத்துக் கொண்டன (2அர. 2:11).

அன்னை மரியா விண்ணகத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையை எல்லா கத்தோலிக்க மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு கிறிஸ்துவ கோட்பாடாக 1950ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள் அனைத்துப் புனிதர்கள் பெருவிழாவில் விசுவாச (நம்பிக்கை) அறிக்கையாக திருத்தந்தை 12ம் பத்திநாதர் அவர்களால் வரையறுக்கப்பட்டு பிரகடணப்படுத்தப்பட்டது. இந்திய மக்களாகிய நாம் நம் நாட்டின் "விடுதலை நாளைக்" கொண்டாடுகின்ற இந்நன்னாளில் நாம் நமக்குள்ளே இனம், மதம், பாகுபாடின்றி வேற்றுமைகளைக் களைந்து அன்பு, உண்மை, நீதி, நேர்மை, தியாகம், பரிவிரக்கம் எனும் அன்னை மரியாவின் பண்புகளின் மாதிரியாக வாழ்வோம் என உறுதிமொழி எடுத்து பக்தியோடு இன்றையப் பெருவிழாத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பேரன்புமிக்க இறைவா, திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை லியோ, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் உமது இறையாட்சிப் பண்புகளான அன்பு, உண்மை, நீதி, தியாகம், பரிவிரக்கம் ஆகியவைகளின்படி நடந்து, உலகிற்கு ஒளிவீசும் மக்களாக வாழத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. தாயும் தந்தையுமான இறைவா, அன்னை மரியாளின் பண்புகளைத் தமதாக்கி, நலிந்தோரை வாழ வைத்து இந்த நானிலத்தையே இறையாட்சியாக வளர்த்தெடுக்க இயேசுவின் அன்பைப் பொழியும் பிள்ளைகளாகவும், அன்னை மரியாளிடம் செபிக்கும் பிள்ளைகளாகவும் வாழத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. நலன் காக்கும் நாயகனே இறைவா, எம் பாரத நாடு அடிமை வாழ்விலிருந்து விடுதலைப் பெற்ற நாளைக் கொண்டாடுகிறது. இன்றைய இந்தியாவை ஆளுகின்ற தலைவர்கள் இயேசுவின் இறையாட்சிப் பண்புகளின் மாதிரியாக விளங்கி, மக்களுக்கு நம்பிக்கையான நல்லாட்சியைத் தரும்படி அவர்களுக்குத் தன்னலமற்ற நல்மனதைத் தந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. குணமளிக்கும் வள்ளலே இறைவா, பிறர் காயங்களைக் குணமாக்குவதால்தான் நம் காயங்கள் ஆறுகின்றன. பிறர் பாரங்களைப் பகிர்ந்து கொள்வதால்தான் நம் சுமைகளும் எளிதாகின்றன. எனவே, ஆண்டவரே மனித நேயப் பண்புகளோடு வாழும் உயர்ந்த எண்ணங்கள், உணர்வுகள், எங்கள் உள்ளத்தில் பதிந்து அவற்றை பிரதிபலிக்கத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

| 17.08.2025 | பொதுக்காலம் 20ம் ஞாயிறு | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திருமதி. டிலைலா சேவியர்*

I. *எரே. 38: 4-6, 8-10* II. *எபி. 12: 1-4* *லூக். 12: 49-53*

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்றைய திருப்பலி வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்ற மையக்கருத்தானது, இறைவனின் வார்த்தையின்படி நாம் உணர்ந்து வாழும்போது, அவருடைய வார்த்தைகளை நம் பற்றியெரியும்போது, நாம் எப்படிப்பட்ட மனிதர்களாக இருக்கிறோம், நம்முடைய வாழ்வில் என்னென்ன தடைகள் ஏற்படுகின்றன, அத்தருணங்களில் இறைவன் நம்மை எப்படியெல்லாம் நடத்திச் செல்கிறார் என்பதை இன்றைய வாசகங்கள் உணர்த்துகின்றன. "மண்ணுலகில் தீயை மூட்டவே வந்தேன்"... அது இப்பொழுதே பற்றியெரிந்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதே என் விருப்பம். தீ புனிதப்படுத்துகிறது, தீ ஒளியை கொடுக்கிறது. தீ வழிகாட்டுகிறது. இப்படிப்பட்ட தீயை ஏற்றிவைக்கவே இன்று நமக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அழைப்புவிடுகிறார்.

ஏனெனில் நம் இறைவன் தீமையை வெறுப்பவர் தவறுகளை சரிசெய்பவர், தடைகளைத் தகர்ப்பவர் இதற்கு முதலில் நாம் இறைவனின் வார்த்தையால் வாழ்க்கையால் சுட்டெரிக்கப்பட வேண்டும். இதற்கு இன்றைய இறைவார்த்தையின் முதல் வாசகம் வழிகாட்டுகின்றது. இறைவார்த்தை என்னும் நெருப்பால் வலுப்பெற்ற எரேமியாவைப்போல நாமும் வலுபெறுவோம். நம்மிலிருக்கும் அன்புத் தீ அயலாரைத் தொடவேண்டும். குடும்பத்தில் தொடங்கி சமுதாயத்தில் பரவவேண்டும். நம்மிடையே எரிந்துக் கொண்டிருக்கும் பகைமை, வெறுப்பு, கோபம் போன்ற தீய எண்ணங்களை இறைவனின் துணையோடு இறைவார்த்தைகளால் அணைக்கவேண்டும். இறைகுரலுக்குச் செவிசாய்த்து திருமுழுக்கில் நாம் பெற்றுக்கொண்டத் தீயை அணையாமல் பார்த்துக்கொள்வோம். தளர்ந்துபோகாமல் இறைவனுடைய துணையோடு செயல்படுவோம். எபிரேயர் 12:12ல் எழுதப்பட்டதுபோல் "தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள், தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்" இறைவார்த்தையை பற்றிக்கொள்வோம். இறைவார்த்தைதான் நம்மை வழிநடத்தும். இறைவார்த்தை நம்மில் பற்றியெரிகிறதா? இறைவார்த்தையை பின்பற்றும் நாம் பிளவுகளை ஏற்படுத்துகின்றதா? அல்லது உண்மைக்கு சான்று பகர்கின்றோமா? ஒளியின் மக்களாயிருந்து இருளை அகற்றும் தீபங்களாக ஒளிர இறைவனிடம் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவை வழிகாட்டிகளாய் நீர் எமக்கு தந்துள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், நற்செய்தியாளர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, இவர்களுக்கு உடல் ஆன்ம நலன்களைத் தரவும், உண்மையில் வழியில் திருஅவை வழிநடத்தும் கிருபையை தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. ஒளியாம் இறைவா, உம்முடைய வார்த்தைகள் எங்கள் உள்ளங்களில் பற்றியெரிந்து அவைகளை எங்களின் மற்றவர்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கும் நற்செய்தியின் விழுமியங்களை அறிவித்திடவும் வேண்டிய அருளைத் தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. நலன்களின் நாயகனே இறைவா, உம்முடைய வார்த்தைகள் எங்கள் உள்ளங்களில் பற்றியெரிந்து அவைகளை எங்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கும், நற்செய்தியின் விழுமியங்களை அறிவித்திடவும் வேண்டிய அருளைத் தந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. ஆறுதலின் தேவனே இறைவா, இறையரசின் பணியில் உழைக்கும் நற்செய்தியாளர்களுக்கு ஏற்படும் தடைகளை நீக்கி, நீர் அவர்களுக்கு ஆறுதளித்து அவர்கள் இறுதிவரை உம் பணி செய்யும் வல்லமையும், ஆற்றலையும், தூய ஆவியாரின் துணையையும் அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 22.08.2025 | அரசியான கன்னி மரியா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

இறையேசுவால் கிறிஸ்தவர்களாகத் தேர்ந்துக்கொள்ளப்பட்ட அன்புச் சகோதரர்களே, சகோதரிகளே, இன்று திருஅவையானது "அரசியான புனித கன்னிமரியாவின் திருவிழாத் திருப்பலிக்கு நம்மை அழைக்கிறது. "வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார் (திவெ. 12:1). இந்தக் காட்சி விண்ணக மாட்சியைக் காட்டுகிறது. அனைத்துலக அரசராம் இயேசுவின் தாய் கன்னிமரியா விண்ணக மண்ணக அரசியாக இருக்கிறார் என்பதை நினைவூட்டுவதுதான் இத்திருவிழாவின் நோக்கம். எபேசு சங்கமும் கன்னி மரியாவை "அரசி" என்று அழைத்து பெருமைப்படுத்தியது.

கன்னிமரியாவை விண்ணக அரசியாகப் போற்றி, அனைத்து நாடுகளையும் அவரது பாதுகாவலில் ஒப்படைக்கும் வழக்கம் 10ஆம் பல நூற்றாண்டில் தோன்றியது. 11ம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் ஹெர்மான் "வாழ்க அரசியே" என்று தொடங்கும் லத்தீன் செபத்தை (கிருபைதயாபத்து மந்திரத்தை) இயற்றினார். இவ்வாறு இறைவனின் தாயை "விண்ணக அரசி" என்று வாழ்த்தும் நடைமுறை பல நூற்றாண்டுகள் தொடர்ந்தது. அன்னை

மரியா பல காட்சிகள் வழியாக, "நான் விண்ணக அரசி" என்று கூறியுள்ளார். 1969ம் ஆண்டு ஆகஸ்டு 22ம் தேதி இந்த விழாவைக் கொண்டாடும்படி திருத்தந்தை 6ம் பவுல் அறிவித்தார். இந்நாளில் அன்னையின் பாதுகாப்பில் தஞ்சம் அடைய அன்னை மரியா வழியாக இத்திருப்பலியில் இறைவனிடம் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பேரொளியான இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருநிலையினர் மற்றும் பொதுநிலையினர் நீர் காட்டும் ஒளியில் நடந்திட உமது இரக்கத்தின் சிம்மாசனத்தில் சேரும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. வியத்தகு ஆலோசகரும் அரசருமானவரே, எங்களை ஆளும் நாட்டுத்தலைவர்கள் மக்களை நல்வழியில் நடத்திச்செல்ல நீர் அவர்களுக்கு நல் ஆலோசனை வழங்கி, நாட்டில் மக்கள் அமைதியாக வாழ்ந்திடவும், அவர்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடிய பரந்த மனதை இவர்களுக்கு அளித்தருளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையளித்த இறைவா, இன்று எம் இளையோர் நவீன சாதனங்கள் மற்றும் அலைபேசி மூலம் உம்மைவிட்டுப் பிரிந்தும், உறவுகளைப் பிரிந்தும் வாழும் நிலைமாறி அவர்கள் உமது திரு இருதயத்தை நோக்கி வந்து தஞ்சமடைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 24.08.2025 | பொதுக்காலம் 21ம் ஞாயிறு | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. லதா சுரேஷ்*

I. *எசா. 66: 18-21* II. *எபி. 12: 5-7, 11-13* *லூக். 13: 22-30*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, நாட்கள் குறிக்கப்பட்டுவிட்டன. இறையரசிற்குள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அனைவரும் நுழையத் தகுதிப் பெற்றவர்களாகின்றோம். கிறிஸ்தவர்களாக இருந்தால் மட்டும் போதாது, வாழ்வில் கிறிஸ்துவுக்குரிய மனமாற்றம் பெற வேண்டும். நாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி நன்கு அறிந்துக்கொண்டாலும், புரிந்துக்கொண்டாலும் நம் வாழ்வாக மாற்றாமல் கொடைகளாக நாம் பெற்றுக்கொண்ட தூய ஆவியானவரின் கொடைகளையும், கனிகளையும் மற்றவர்களுக்கு அளிக்க மறந்தவர்களாய் வாழ்கின்றோம். "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" என்று பவுலடிகளார் 1கொரிந்தியனில் கூறுகின்றார். நற்செய்தி அறிவிப்பது நமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு அது ஒரு இறைப்பணியாக கருதப்படவேண்டும். இறைவன் நம்மிடம் எதிர்ப்பார்ப்பது பொன்னும் பொருளும் அல்ல, நாம் பெற்றுக்கொண்ட இயேசுவின் அன்பை அவர்மூலம் நாம் பெற்றுக்கொண்ட மீட்பை பெறப்போகும் நிலைவாழ்வை இயேசு கிறிஸ்து வழியாய் இன்றி

வேறுயாராலும் அளிக்க முடியாது என்பதை பிற இனத்தாரும் அறிய வேண்டும் மீட்பு பெற வேண்டும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற திருமூலரின் வரிகளுக்கேற்ப இறையாட்சி எங்கும் மலர்ந்திட, எல்லா இனத்தாரும் மொழியினரும் ஒன்றாய் இணைந்திட, விசுவாசத்தில் திளைத்திட வரம் கேட்போம். இறைவனின் வருகையில் என்றும் உண்மையுள்ளவர்களாய் வாழ்ந்திட இத்திருப்பலியில் இணைந்திடுவோம், இறையாசீர் பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. இறையாட்சி மண்ணில் மலர ஆன்மாக்களை இறைவன்பால் கொண்டு சேர்த்திட உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் குருத்துவம் என்னும் வார்த்தையின் உண்மையினை உணர்ந்து தாம் ஆயனின் மேய்ப்பன் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு எவ்வித அச்சமுமின்றி செயலாற்ற தேவையான ஆன்ம உடல்பலம் தந்து காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் ஊற்றே எம் இறைவா, உலகெங்கும் போர் அபாயம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இதனால் மக்கள் இருக்க இடமின்றி, உணவு, உடையின்றி தவித்துக்கொண்டிருக்கிறார்கள். வளரும் குழந்தைகள், வயது முதிர்ந்தோர், தங்கள் பெற்றோர், பாதுகாவலர்களை இழந்து ஆதரவற்ற அனாதைகளாக்கப்படுகின்றனர். இந்த அவலநிலைமாறி எங்கும் அமைதியும் சமாதானமும் நிலைத்திருக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாப்பின் பெட்டகமே எம் இறைவா, நாடுகளுக்கிடையே ஏற்படும் போர் கலவரங்கள், பலவிதமான பிரச்சனைகள், இக்கட்டான சூழல்களில் சிக்கித் தவிக்கும் நாட்டினை நீரே முன்னின்று நாட்டையும் நாட்டையாளும் மக்களையும் பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. கருணையின் கடலே எம் இறைவா, இன்றைய இளையத் தலைமுறையினர் எதிர்ப்பார்ப்புகள் அதிகம் கொண்டவர்களாக வளர்கின்றனர். அவர்களின் எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாதபோது அதை சமாளிக்கும் திறன் இல்லாமல் தற்கொலைச் செய்யும் எண்ணம், குடிப்பழக்கம், தீயநட்பு, போதை பொருட்களுக்கு அடிமைகளாகின்றனர். இந்நிலைமாறி எதையும் எதிர்க்கொள்ளும் திறனும், நல்லது கெட்டதை பகுத்து ஆராய்ந்து என்றும் வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 25.08.2025 | அருளாளர் மரிய ட்ரொங்காட்டி<br>*வருகிற அக்டோபர் மாதம் புனிதராக உயர்த்தப்பட உள்ளார்* | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

கிறிஸ்துவில் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே, இன்று திரு அவையானது சலேசிய சபையைச் சேர்ந்த அருளாளர் மரிய ட்ரொங்காட்டி அவர்களின் திருவிழாவை கொண்டாட நம்மை அழைக்கிறது. இவர் இத்தாலி

நாட்டில் கார்டெகோ கோல்ஜி (ப்ரேசியா) நகரில் 1883 பிப்ரவரி மாதம் 16ம் நாள் பிறந்தார். இவர் இளமைப்பருவத்திலிருந்தே கடின உழைப்பில் வாழ்ந்து மகிழ்ச்சியோடு இருந்தார். தினமும் அருட்தந்தையரிடம் மறைக்கல்வி கற்று இறை நம்பிக்கையில் வளர்ந்து வந்தார். முதல் உலகப்போரின்போது (1915-1918) சிஸ்டர் மரியா வராஜ்லில் சுகாதாரப் பாதுகாப்பு பயிற்சியை முடித்து இராணுவ மருத்துவமனையில் செஞ்சிலுவை செவிலியராக பணியாற்றி வந்தார். இந்த மருத்துவ அனுபவம் எக்குவேடார் அமேசான் காட்டுப்பகுதியை ஒட்டியுள்ள ஊர்களில் இயேசுவைப் பற்றி அறிவிக்கும் சலேசிய மிஷினரியாக இவரை உயர்த்தியது. இங்குள்ள மக்களுக்கு இறைத் தந்தையின் அன்பு மற்றும் அன்னை மரியாவின் தாழ்ச்சியைப் பற்றி பெண்ணாக இருந்தாலும் கல்வாரிநாதரின் திருமுகத்தைப் பார்த்து சக்தி பெற்றவளாக மகிழ்ச்சியுடன் இறைப்பணி, மருத்துவப்பணி இரண்டின் மூலம் நம்பிக்கை இழந்தவர்களுக்கு "சிறிய தாயாக" காட்சியளித்தார். 1960ல் இயற்கை வளங்களைச் சுரண்டும் வெள்ளைக்கார குடியேற்றக்காரர்களுக்கும் சுகூயா பகுதி மக்களுக்கும் ஏற்பட்ட சண்டையின்போது சலேசியன் மிஷினரியாக பாதிக்கப்பட்ட சுகூயா மக்களுக்காக குரல்கொடுத்தார். 1969 ஆகஸ்டு 25ம் தேதி அதுவாவில் ஏற்பட்ட விமான விபத்தில் அருளாளர் மரணமடைந்து அவரின் திருவுடல் மண்ணில் விழுந்த போது மோதல், சண்டைச் சச்சரவுகளும் வீழ்ந்து சிதறிப்போயின. 2008ம் ஆண்டு நவம்பர் 8ம் நாள் "கடவுளின் ஊழியர்" என்று அழைக்கப்பட்டார். பொறுமை, சகோதரத்துவத்தில் செல்வந்தர்களாக மாற அருளாளரிடம் இந்த திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நன்மைகளின் நாயகனே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் உமக்கேற்ற வாழ்க்கை வாழ்ந்து எல்லோருக்கும் நன்மை செய்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அரசர்களுக்கெல்லாம் அரசே எம் இறைவா, உமது மக்களை செம்மையாய் வழிநடத்த உம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட எம் தலைவர்கள் உமது அரசை இப்பூமியில் தழைக்கச்செய்ய வேண்டிய ஞானத்தையும், வல்லமையையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
3. குணமளிக்கும் இறைவா, அருளாளர் மரிய ட்ரொங்காட்டியின் மருத்துவ சேவை ஏழை எளிய மக்களுக்கு நற்சுமளித்தது மட்டுமல்லாமல், இறை நம்பிக்கையிலும் வேரூன்றி நிற்கச் செய்தது. அதைப்போல் நாங்களும் உடல் அளவிலும் மனதளவிலும் சுகம்பெற்று விசுவாசத்தில் வளர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 26.08.2025 | அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. ஜான் அலெக்ஸ்*

இறையேசுவில் இனிய இறைமக்களே, நம் திருஅவையானது இன்றைய அருளாளரான செப்பரீனோ நமுங்க்குரா தினத்தை சிறப்பிக்க அழைக்கின்றது.

19 வயதில் இறைவனை சென்றடைந்த இந்த அருளாளர் "செப்பரீனோ நமுங்க்குரா என்ற இளம் தென்றல் 1886ம் ஆண்டு ஆகஸ்து 26ல் "சிம்ப்பே" என்னும் ஊரில் அரசாங்க பதவி வகித்த "இம்மானுவேல்" என்பவருக்கு பிறந்தவர். தன் மகன் நன்கு படித்து தன் இனத்தவரை பாதுகாப்பான் என்ற எண்ணத்தில் "பியுனஸ்" என்ற இடத்திற்கு அனுப்ப நினைத்தும் மகனின் விருப்பத்திற்கேற்ப புனித ஜான் போஸ்கோவின் இல்லத்திற்கு அனுப்பினார். அங்கு அவர் பெற்ற ஆன்மீக அனுபவமும், அன்பும்தான் ஒரு சலேசிய குருவாக வேண்டும் என்றும் மக்களுக்குத் தொண்டு செய்யும் சிறந்த மதபோதகராக வேண்டும் என்றும் புனித தோமினிக் சாவியோ போன்று பக்தியிலும் தியாகத்திலும் கடமை உணர்விலும் அவரின் எடுத்துக்காட்டாக மாற வேண்டும் என்று விரும்பினார்.

துறவற இல்லத்தில் முன்மாதிரியாக வாழ்ந்தார். விளையாட்டு துறையின் தலைவராக இருந்து மாணவர்களிடம் அன்பான வார்த்தைகளால் பேசி அவர்களின் மனதைக் கவர்ந்தார். இவரின் சிலுவை அடையாளம் வரையும் முறை அனைவரையும் கவர்ந்தது. சிலுவையடையாளம் வரையும்போது மிகுந்த பக்தியோடு உணர்ந்து வரைவார். "ஆயர் கலியரோ" இவரை இளம் குருமாணவராக்க இளம் குருமடத்தில் சேர்த்தார். உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அருளாளர் செப்ரீனோ இத்தாலி மொழி கற்றார். அங்கே "தொன் ரூவாவையும், திருத்தந்தை பத்தாம் பயஸையும் சந்தித்து திருத்தந்தையிடம் ஆசி பெற்றார். துரின் கல்வி கூடத்திலும் வில்னா சேராவிலுள்ள கல்லூரியிலும் படித்து இரண்டாம் இடத்தில் தேர்வு பெற்றார். தன் உடலில் ஏற்பட்ட காசநோயை சரிவர கவனிக்காததால் உரோம் நகரில் உள்ள மருத்துவமனையில் 1926ம் ஆண்டு மே 11ல் இறந்தார். இவரின் சொந்த நாடான அர்ஜென்டினாவின் "போர்டின்மெர்சி டெஸ்" என்னும் ஊரில் அடக்கம் செய்யப்பட்டார். இவரது கல்லறையில் அநேகர் செபித்து பல அற்புதங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

2007, நவம்பர் 11ல் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் இவருக்கு அருளாளர் பட்டம் வழங்கினார். இளம் வயதில் சலேசிய இளங்குரு மாணவராக புனித தொன் போஸ்கோவின் இல்லத்தில் பக்தியுடனும், தியாக உள்ளத்துடனும் வாழ்ந்த அருளாளர் செப்பரீனோ நமுங்க்குராவின் வாழ்வை மனதில் நிறுத்தி அவரின் அனுபவங்களைப் பெற்று மகிழ்ந்து வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, திருஅவையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் உலகின் மாற்றங்களைக் கண்டு மனம்மாறாமல், மாயை உலகின் காட்சிகளுக்கு அடிமையாகாமல் உம்மீது உண்மையான நம்பிக்கைக் கொண்டவர்களாக, நற்செய்தியின் விழுமியங்களை பறைசாற்றிட உமதருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எம்மை பெயர் சொல்லி அழைக்கும் இறைவா, இயேசு கிறிஸ்துவின் போதனைகளை சீடர்கள் வழியாகவும் இறைவாக்கினர்களின் வாயிலாகவும், நற்செய்தியாளர்கள் வழியாகவும் எமக்கு போதித்த இறைவனின் வழியினை அனைத்து மக்களும் பின்பற்றிச் செல்ல உம்வழிதனை காட்டியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நல்லாயனாம் இறைவா, வளரும் இளம் சமுதாயத்தில் வழிதவறிய ஆடுகளைக் கூட்டி சேர்த்து நல்வழி நடத்த வேண்டியும், இளம் குருமாணவனாகிய அருளாளர் செப்பரீனோ நமுங்க்குராவை இளம் வயதிலேயே நீர் அழைத்துக்கொண்டபோதிலும் குருமடங்களில் பயிலும் இளம் குரு மாணவர்களை காத்து, வழிநடத்திடவும், சிறந்த குருக்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 27.08.2025 | புனித மோனிக்கா | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. டிலைலா சேவியர்*

"மகனே, எனது உடலை எங்கே வேண்டுமானாலும் அடக்கம் செய்யலாம், ஆனால் ஒன்று மட்டும் கேட்கிறேன், நீர் எங்கேயிருந்தாலும் ஆண்டவரின் பீடத்தில் என்னை நினைவு கூர்ந்தால் போதும்" என்று தன் மகனிடம் தன் விருப்பத்தைக் கேட்டுக்கொண்ட புனித மோனிக்கம்மாள் கிறிஸ்துவ அன்னையருக்கும் குடும்பத் தலைவிகளுக்கும், விதவைகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டு. இவர் பட்ரிசியஸ் அவ்ரிலியுஸை மணமுடித்தாள். கணவன் கடும் கோபம் படைத்தவர். அவரால் வந்த இக்கட்டுகளையெல்லாம் புனித மோனிக்கம்மாள் பொறுமையுடன் சகித்துக்கொண்டாள். இவளது நல்வாழ்வும், சாந்த குணமும் இவளுடைய கணவனின் குணத்தை மாற்றியது. இறுதியில் இவளின் கணவரும், மாமியும் திருமுழுக்குப்பெற்று திருச்சபையின் மக்களாக சேர்ந்து பின்பு மரித்து போயினர்.

மகன் அகுஸ்தின் இவளுக்கு பெரும் சிலுவையாக இருந்தார். தன் மகன் எப்படியாவது மனம் திரும்ப வேண்டும் என்னும் தேவையினால் ஆயர் அம்புரோசியாரை அடிக்கடி அணுகி கண்ணீருடன் தன்னுடைய மகன் அகுஸ்தினை இறைவன் தொட வேண்டுமென்று வேண்டிக்கொள்ள கெஞ்சுவார். செல்லும் ஆலயங்களில் எல்லாம் தன் மகனுக்காக கண்ணீர் விட்டு செபிப்பாள். அகுஸ்தின் தனது 32ம் வயதில் மனமாற்றமடைந்து கிறிஸ்தவராகி, குருவாகி பின்னர் ஆயர் ஆனார் என்றால் அந்த அருள் தாய் மோனிக்கம்மாளின் செபத்தின் விளைவே ஆகும். இத்திருப்பலியில் தங்களின் மக்களின் உடலைவிட ஆன்மாவை அதிகமாக நேசிக்கும் தாய் உள்ளங்களை உலகில் உருவாக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையே இருப்பிடமான இறைவா, உமது பணியை தொடர்ந்து நிறைவேற்றும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் இருபால் துறவறத்தார் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபையை

தங்களின் செபத்தாலும், தவத்தாலும் வாழ்க்கை நெறிகளினாலும் இளைய சமுதாயத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருப்பதுடன் தங்களின் பணிக்கு இளைஞர்களையும், இளம்பெண்களையும் தேவ அழைத்தலுக்கு உற்சாகப்படுத்தும் முயற்சியை இவர்கள் தொடர்ந்து செய்யும்படி தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நல்லாயனாம் இறைவா, சிற்றின்பத்தின் அழிவுப்பாதையில் சென்றுக்கொண்டிருக்கும் மக்களை உமது கோலும், கழியும் நல்லதொரு பாதையில் கொண்டுச் சென்று அழியாத தூய்மையான வாழ்வை என்றும் மேற்கொண்டு இறுதியில் இறைவனை அடைய ஆயனே இறைவா எம்மோடு நீர் தங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. தாயும் தந்தையுமான இறைவா, உம்முடைய பிரதிநிதிகளாக விளங்கும் பெற்றோர்கள் தங்கள் குழந்தை செல்வங்களை இறைபக்தியில் வளர்க்கவும், வழிமாறி செல்லும் பிள்ளைகளை தங்களின் முன்மாதிரியான வாழ்வின் வழியாகவும், செபத்தாலும், தவத்தாலும் வழிநடத்த புனித மோனிக்கம்மாவைப் போன்ற பொறுமையான உள்ளத்தை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

| 29.08.2025 | திருமுழுக்கு யோவானின் பாடுகள் | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை**

*திரு. இம்மானுவேல் ஜெயராஜ்*

புனிதர்கள் பலருடைய உத்தம மாதிரிகைகளை கண்ணுற்றுப் பார்த்தால் நாம் செய்வது சொற்பமென்றும் ஏறக்குறைய பூஜ்ஜியமென்றும் அறிவோம். இன்றைய நாளில் திருமுழுக்கு யோவானின் பாடுகளை தியானிக்க நாம் அழைக்கப் பெற்றுள்ளோம். ஸ்நாபக அருளப்பர் என்றும் அழைக்கப்படும் இவர் செக்கரியா, எலிசபெத் என்ற வயது முதிர்ந்த பெற்றோர்க்கு மகனாக பிறந்தார். தன் வாலிப வயதில் இயேசுவின் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்தி அவர்களுக்கு திருமுழுக்கு கொடுத்து வந்தார். இதன் காரணமாக அரசர்கள், மதத் தலைவர்கள், பரிசேயர் இவர்களின் எதிர்ப்புக்களுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளானார்.

ஒட்டக முடியாலான ஆடையை அணிந்து, தோல்கச்சையை இடையில் கட்டி, வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் உண்டு பாலைநிலத்தில் வாழ்ந்து வந்தார். இத்தகைய வாழ்வு எவ்வளவு துன்பகரமானது என்பதை நம்மால் உணர முடியாது. குருநில மன்னன் ஏரோது தன் சகோதரரான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொள்வது முறையற்ற செயல் என்று தைரியமாக குற்றம் சுமத்தியதால் சிறையில் அடைக்கப்பட்டார். வஞ்சகமாக கொல்லப்பட்டார். இப்பேர்பட்ட மறைசாட்சிகள் இரத்தத்தால் வளர்ந்துள்ள நம் கத்தோலிக்க திருச்சபையை நம் செபத்தாலும், தபத்தாலும் உண்மையான தூய ஊழியத்தினாலும் காக்க உறுதி கொண்டு இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள்,

குருக்கள் அனைவரும் திருமுழுக்கு யோவானை தங்கள் முன்மாதிரியாக கொண்டு இறை ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணிக்க உமதருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, அருட்கன்னியர்கள், துறவறத்தார், இறைவாக்குப் பணியாளர்கள் தன்னார்வ தொண்டர்கள் அனைவரும் உலகைச் சார்ந்த ஆசாபாசங்கள், உடல் இச்சைகள் மற்றும் தீயோனின் சோதனைகளை வெல்ல தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு இறைவார்த்தையில் வழிநடத்தப்பட உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு தந்தையே, எங்கள் நாட்டையும் உலக நாடுகளையும் ஆள்பவர்கள் நீதி, நேர்மை, ஒழுக்கம், மனித நேயம் இவற்றை மதிக்கும் நல்ல உள்ளம் படைத்தவர்களாக தங்கள் மக்களின் நலம் கருதி தங்கள் பணியினை செய்யும் நல்ல இதயம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. கருணைக் கடலே, கத்தோலிக்க திருச்சபையின் குடும்பங்கள் அனைத்தும் செக்கரியா எலிசபெத் குடும்பத்தைப்போல் இயேசுவுக்காக அனைத்தையும் கையளிக்கின்ற தியாக உள்ளம் வேண்டி இறைவா உம்மை வேண்டுகிறோம்.

| 31.08.2025 | பொதுக்காலம் 22ம் ஞாயிறு | திருப்பலி |
|---|---|---|

**முன்னுரை** *திருமதி. ராணிசம்பந்தன்*

I. *சீராக். 3: 17-18, 20,28-29* II. *எபி. 12: 18-19, 22-24* *லூக். 14: 1,7-14*

இறையேசுவில் அன்புக்குரியவர்களே, இன்றைய தினம் நம் திருஅவை பொதுக்காலம் 22ம் ஞாயிறைச் சிறப்பிக்க நம்மை அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் சிறுவயது முதல் வளர்ந்து வரும் பருவத்தில் குழந்தைகளுக்கு பணிவின் உயர்வை எடுத்தியம்பியுள்ளது. இதனால் ஆண்டவரின் பரிவும், இரக்கமும் எக்காலமும் துணையிருக்கும் என்ற கருத்து நம்மனதில் வேறுன்ற உதவியுள்ளது. ஒடுக்கப்பட்டோருக்கு மறுவாழ்வும், சிறைபட்டோருக்கு விடுதலையும், திக்கற்றோருக்கு தந்தையாகவும் விதவைப் பெண்ணுக்கு காப்பாளராகவும் உள்ளார் என திருப்பாடல் கூறுகிறது. இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் சீயோன் மலை விண்ணக எருசலேம் என்றும் அதில் நேர்மையாளர்களும் விண்ணகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ள தலைப்பேறானவர்களும் இயேசுவின்முன் நிற்பார்கள் என கூறுகிறார்.

நற்செய்தியாளர் லூக்கா திருமண விருந்தில் முதன்மையான இடத்தை தேடாமல் தம்மை தாழ்த்தும் போதுதான் பெருமைக்குரியவராக மாறமுடியும் என்பதை தம்மைத் தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என்றும், விருந்துக்கு அழைக்கும்போது செல்வம் படைத்தோரை அழைக்காமல் ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழைக்கும்போது பேறுபெற்றவராவார் என்றும் கூறுகிறார். ஆகவே பணிந்திருத்தலே உயர்வை தரும் என்ற ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இறுமாப்பு உடையோராய் இல்லாமல், தன்னை தாழ்த்துபவருக்கு இயேசுவின் பரிவும் உயர் வாழ்வும் கிடைக்கும் என்ற சிந்தனையில் இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் பரம தந்தையே, எம் திருத்தந்தை பதினான்காம் லியோ கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் ஒருவருக்கொருவர் இறுமாப்புக் கொள்ளாமல் ஆண்டவரின் முன்னிலையில் அனைவரும் சமம் என்பதை உணர்ந்து அருள்வாழ்வில் தங்கள் கடமைகளை உணர்ந்து செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் உன்னதரே, உலக நாடுகள் முழுமைக்கும் அமைதி கிடைக்கவும், நாடுகளுக்கிடையே நடந்துக்கொண்டிருக்கும் போர் தந்திரங்கள், அபாயங்கள் நீங்கவும் வேண்டிய வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. சக்தியின் ஊற்றே இறைவா, தாங்கள்தான் சக்திபடைத்தவர்கள் என்ற எண்ணங்கள் நீங்கவும் அனைவரும் இறைவனின் ஒரே குடும்பம் என்ற உணர்வு நம்மிடையே நிலவி ஒற்றுமையோடும் சமாதானத்தோடும் வாழும் நல்லுள்ளம் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. பாதுகாப்பின் பிறப்பிடமே, இன்றைய இளைய தலைமுறையினரை உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கைத்துணையும், வேலைவாய்ப்பும் கிடைக்கப்பெற்று வாழ்வில் வளர உமது நற்செய்தியின்படி வாழ உம் தூய ஆவியின் அருட்கொடைகளை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2 : நம்பிக்கையில் வளர ...

### மரியாவின் விண்ணேற்பும் - விடுதலையும்

*திரு. புல்லோன் ஜோ. லூயிஸ்*

மரியாளின் விண்ணேற்பு விழா, இயேசுவின் உயிர்ப்பில் நாம் பங்கெடுக்கின்றோம் என்பதை உறுதிபடுத்தும்விழா. இயேசுவில் நம்பிக்கையுடையோர்க்கு இறப்பில்லை எனப் பறைசாற்றும் விழா. இறந்தாலும் உயிர்பெற்றெழுவீர் எனக் கூறும் விழா. இயேசுவின் மாட்சிக்கும் மணிமகுடத்திற்கும் நவரத்தினக் கல்லைப் பதிப்பதுபோல் மரியன்னையின் விண்ணேற்பு அமைந்துள்ளது. மரியாள் ஒரு சாதாரணப் பெண்ணல்ல, அவள் இறைவனின் தாய். மானிட மீட்பரைப் பெற்றெடுத்தவள். மீட்புத் திட்டத்தில் அவரோடு முழுமையாக ஒத்துழைத்தவள். இறைவனின் ஓர் அழகிய ஒப்பற்ற படைப்பு. மனிதன் என்றாலே பாவமும் பழியும்தான் என்பதை மாற்றியவள். உலகினை மீட்கவந்த இயேசு தூய்மையானவர். அப்படிப்பட்டவர்க்கு உடல் கொடுத்த மரியாளும் அவரைப் போலவே தூய்மையும், தனித்துவமும் உள்ளவராய் இருக்க வேண்டுமென இறைவன் விரும்பினார். பாவம் அற்றவராக பிறக்க வைத்தார். பாவத்திலிருந்து காத்தார். மனிதர்கள் அனைவரும் இயேசுவால் மீட்கப் பட்டவராயினும், மரியாள் தந்தையால் மாண்புடன் காக்கப்பட்டவாள் அமல உற்பவி.”

**"இயற்கையில் பிறப்பு என்பது இனிமையான இன்பம். இறப்பு தாங்க முடியாத துன்பம்."**

இறப்பு என்றாலே இழப்பு, அழிவு, துன்பம். அன்னை மரியாளின் இறப்போ, அவளின் அழியாத உடலோடு, வாழ்வின் உச்சத்திற்கே வலிமையோடு எடுத்துக் கொள்ளப்பட்டதை நினைவுப் படுத்துகிறது. இவ்வுலக வாழ்வோடு நம் வாழ்வு முடியவில்லை. மாறாக நாம் அனைவருமே மரியாளைப்போல் விண்ணக வாழ்விற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதன் முன்னடையாளமாகவே அன்னையின் விண்ணேற்பு அமைகிறது. அன்று மரியாளின் இறுதி வாழ்வு விண்ணேற்புடன் நிறைவு பெற்றது என்று நம்பிய இறைமக்கள், கி.பி 4-ம் நூற்றாண்டிலிருந்து விண்ணேற்பு அன்னைக்கு விழா எடுக்க ஆரம்பித்தனர். கி.பி 5-ம் நூற்றாண்டில் எருசலேமில் ஆகஸ்ட் 15-ம் நாளன்று இவ்விழா கொண்டாடப்பட்டது. கி.பி 6-ம் நூற்றாண்டு முதல் மரியாளின் விண்ணக பிறப்பு நாள் என்றும், கி.பி 8-ம் நூற்றாண்டு முதல் ஆகஸ்ட் 15-ம் நாள் மரியன்னையின் விண்ணேற்பு விழாவாகவும் கொண்டாடப்பட்டது. 1922-ம் ஆண்டு திருத்தந்தை 11-ம் பத்திநாதர் பிரான்சு நாட்டை விண்ணேற்பு அன்னையின் பாதுகாப்பில் ஒப்படைத்தார். 1950-ம் ஆண்டு நவம்பர் 1-இல் திருத்தந்தை 12-ம் பத்திநாதர் அன்னை மரியாள் ஆன்மா மற்றும் உடலோடு விண்ணேற்பு அடைந்தாள் என்னும் மறையுண்மையைப் பிரகடணப்படுத்தினார்.

ஆம், அன்னை தம் உடலை மதித்து உடலில் பெற்ற கடவுளின் கொடையான வாழ்வை மனித நேயத்துடன் இறைதிருவுளத்திற்கேற்ப வாழ்ந்து, சந்தித்த சோதனைகள், துன்பங்கள், முரண்பாடுகள் அனைத்திலும் மூழ்கிப்போய்விடாமல், தம் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும் மட்டும் இறைவனைஅன்பு செய்யாமல், தம் முழு உடல் வாழ்வையே இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்ததால் மரியாவின் உடலும் ஆன்மாவும் புனிதம் பெற்றது. இம் முழு மனித மீட்பான விண்ணேற்பையே தம் அன்னைக்கு இயேசு மணிமகுடமாக்கினார்.

இறைவன் தன் மகள் மரியாளை **"அமல உற்பவி", "எப்போதும் கன்னியானவள்"** எனும் உண்மையின் அடிப்படையில் தான், அன்னை தன் மண்ணக வாழ்வை முடித்ததும் அவளை ஆன்ம உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொண்டார். மரியாளின் இந்த விண்ணேற்பு, தனிமனித அடிமைத்தனம், சமூக அடிமைத்தனம் என்ற இருவேறு அடிமைத் தனங்களிலிருந்து விடுதலை அடைந்ததை குறிக்கிறது. தனிமனித விடுதலையைக் காட்டும் விதமாக, மரியாள் இம்மண்ணுலக வாழ்வின் எல்லா வகைத் தீமைகளிலிருந்தும் விடுதலையானாள் என்பதை குறிக்கிறது. இன்னும் ஒருபடி மேலாக மரியாளின் விடுதலைக் கீதம் (லூக் 1: 45-55). தெள்ளத் தெளிவாக்குகிறது.

மரியாள் சமூக அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலையானாள், அவள் வாழ்ந்த யூதசமூகம், பலவகை அடிமைத்தனங்களில் மூழ்கியிருந்தது.

பெண்ணடிமைத் தனம், சட்ட அடிமைத்தனம், சமய அடிமைத்தனம், பொருளாதார அடிமைத்தனம் என இந்த அடிமைத்தனங்களிலிருந்து அந்த சமூகத்தை விடியலுக்கு அழைத்துச் செல்லத்தான் மரியாளின் மகன் இயேசு புறப்பட்டார். அதனால் "அவரின் போதனை ஓர் புரட்சிப் போதனை, அவரின் சாவு ஒரு புரட்சியாளரின் சாவு".

**இயேசு ஒரு புரட்சியாளர்.** எனவேதான் ஏழைகளையும், அனாதைகளையும், பெண்களையும், குழந்தைகளையும், பல்வேறு அடிமைத்தனத்திற்குட்படுத்தி வந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகப் புரட்சி செய்து, அந்த புரட்சியால் தன் இரத்தம் சிந்தி, உயிரைக் கொடுத்து, அந்த யூத சமூகத்திற்கு விடுதலையளித்தார். இந்த புரட்சிச் சிந்தனையும், துணிவும் இயேசுவிற்கு கண்டிப்பாக அவரின் தாய் மரியாளிடமிருந்து தான் கிடைத்திருக்கும், காரணம் ஒரு தாய் தன் குழந்தையை மார்போடு அணைத்து பால் கொடுக்கும்போது, அவள் வெறும் உடல் சக்திக்கான பாலை மட்டும் கொடுக்கவில்லை அதோடு தன் குணநலன், பண்புகள், பண்பாடுகள், புரட்சிச் சிந்தனைகளையும் சேர்த்து ஊட்டுகிறாள். இவ்வாறு மரியளின் விண்ணேற்புப் பெருவிழா தனிமனித விடுதலையையும், சமூக விடுதலையையும் குறிக்கிறது. ஆம், ஒரு மனிதன் சமூகத்தின் தீமைகளிலிருந்து விடுதலைப் பெறவேண்டும் என்றால், அவன் தன்னிலே விடுதலையடைந்தவனாக இருக்க வேண்டும்.

"தனிமனித விடுதலையே - சமூக விடுதலைக்கு வித்தாகும், சமூக விடுதலையே - தனிமனித விடுதலையின் சொத்தாகும்." இத்தகைய அடிமைத்தனங்களை வேரோடு அழிக்க தனிமனிதனோடு, நம் சமூகமே விழித்தெழுந்து, போராட வேண்டும். அடுத்தவரின் விடுதலைக்காக, "காயங்களை ஏற்போம். தழும்புகளைச் சுமப்போம்." அப்போதுதான் அன்னை மரியாளைப் போன்று பெண்களுள் ஆசீர்வதிக்கப்பட்டவளாக, மனிதருள் மாணிக்கங்களாக வாழ்வோம். அதுவே விண்ணேற்பு வாழ்வின் அர்த்தமாகும்.

## அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா - வாழ்வு தரும் பாடம்

*திரு. ஜான் அலெக்ஸ்*

அர்ஜென்டீனாவின் ரீயோ நீக்ரோ பகுதியில், சிம்பேய் என்னுமிடத்தில் அரோக்கன் பழங்குடியினரின் தலைவராயிருந்த மனுவேல் நமுங்க்குராவுக்கும் ரொசாரியா என்பவருக்கும் ஆகஸ்டு 26, 1886ல் ஆறாவது மகனாக மொராலெஸ் நமுங்க்குரா பிறந்தார். பின்நாளில் மொராலெஸ் என்பது செப்பரினோ என பெயர் மாற்றப்பட்டார். ஒரு பழங்குடியினரின் குடும்பத்தில் பிறந்தவர் பிற்காலத்தில் ஒரு புனிதத்தின் முன்னோடியாய் திகழ்வார் என்பதற்கு சான்றாக அமைந்தது அவருடைய குழந்தைப்பருவம். தன் மூதாதையர், தன் பழங்குடியின் பின்புலம் பற்றி அறிந்திருந்த சிறுவன் செப்பரீனோ, தானும் ஒரு போர் வீரனாய் உருவெடுக்க வேண்டும் என்று எண்ணியதுண்டு.

தன் பழங்குடியின் பிற்காலத்திற்கு இவனே வித்திட வேண்டும் என்ற நம்பிக்கையில் 1897ல் தன் மகனை புலோன்ஸ் ஏர்வாவில் ராணுவ பள்ளியில்

சேர்த்தார் மனுவேல். தொடக்க முதலே அதில் ஆர்வமில்லாத செப்பரீனோவின் மனது வேறெதையோ நாடியவாறு இருந்தது. இதை உணர்ந்த மனுவேல் செப்பரீனோவை அதே பகுதியிலிருந்த சலேசிய பள்ளி ஒன்றில் சேர்த்தார். அன்பும் அரவணைப்பும் புரிதலும் முழுமையாய் இருந்த அந்த சலேசியப் பள்ளி, செப்பரீனோவுக்கு மகிழ்ச்சி அளித்தது. அடிப்படையில் செப்பரீனோ பக்தி முயற்சிகள், மறைக்கல்வி, அருட்சாதனங்கள், நற்கருணை பக்தி, செப ஆர்வம் ஆகியவற்றில் நாட்டம் உள்ளவனாய் இருந்ததை அப்பள்ளியில் இருந்த சலேசியர்கள் கண்டுகொண்டனர். சக மாணவர்களோடு ஒத்து வாழ்வது, கட்டுப்பாடுகளோடு இருப்பது போன்றவை சுதந்திரமான பழங்குடி வாழ்க்கையில் வளர்ந்த செப்பரீனோவுக்கு, முதலில் நடைமுறைக்கு ஒவ்வாதவையாக இருந்தாலும், காலப்போக்கில் இவற்றை உள்வாங்கி மற்ற மாணவர்களுக்கு முன்மாதிரியாய் பேசப்படும் படியாக வளர்ந்தார் செப்பரீனோ.

**செப்பரீனோ வாழ்ந்த வாழ்க்கையின் சிறப்புக்கு பின்வரும் ஒரு சில சான்றுகளை கூறலாம்.**

**போலியான, உண்மையற்ற பக்தியை ஒழித்தவர் :** மாணவர்கள் ஒவ்வொரு நாளும் குழுவாக சிலுவைப்பாதை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். செப்பரீனோவின் தலைமையில் சிலுவைப்பாதை செய்த குழுவில் மட்டும் எப்போதுமே எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. இதற்கு செப்பரீனோவிடமிருந்த பக்திதான் முதல் காரணம் என்று அனைவருமே உணர்ந்திருந்தனர். போலி பக்தியோ, உண்மையற்ற வாழ்வோ ஒருபோதும் செப்பரீனோவினிடத்தில் காணப்படவில்லை. இதுவே பல மாணவர்களை இவரிடம் ஈர்த்தது.

**கருணை மற்றும் அமைதியின் தூதுவன் :** செப்பரீனோ கருணை மற்றும் அமைதியின் தூதுவனாக தன் வாழ்வில் நடந்தார். தன் முதல் திருவிருந்து நாளுக்கு முன் தன்னோடு மனத்தாங்கல் கொண்டிருந்த ஒரு மாணவனிடம் சென்று மன்னிப்புக் கேட்ட நிகழ்வை அவருடைய நண்பர்கள் என்றும் நினைவில் வைத்திருந்தனர். அதுமட்டுமல்ல, பல நேரங்களில் மாணவர்களிடையே சண்டை வந்தபோது செப்பரீனோவின் நடுவத்தன்மையை மதித்துக் தீர்வுகள் காணப்பட்டன என்பதை அவரின் நண்பர்கள் கூறக் காண்கின்றோம்.

**சுயக்கட்டுப்பாடு :** செப்பரீனோவின் ஆசிரியர்களாகவும் பொறுப்பாளர்களாகவும் இருந்தவர்கள் அவரிடம் அசாத்தியமான கட்டுப்பாடு இருந்ததாகக் கூறுகின்றனர். அவர் தனக்கென ஒரு வாழ்வு முறையை வகுத்துக்கொண்டு அதன்படி வாழ்ந்தது மிகத்தெளிவாக தெரிந்தது. மறைக்கல்வி தொடர்பான எந்தப் போட்டியாக இருந்தாலும் செப்பரீனோவே முதலாவதாக நிற்பார். மரியன்னையின் படம் ஒன்றும் தோமினிக் சாவியோவின் படமொன்றும் எப்போதுமே அவர் மேசையின்மீது இருக்கும். வாரந்தோறும் ஒருமுறை ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதும் தினமும்

நற்கருணை உட்கொள்வதும் அவரின் பழக்கமாயிருந்தது. பீடச்சிறுவனாயிருந்து திருப்பலிக்கு உதவி செய்வது அவருக்கு எப்போதும் பெருமகிழ்ச்சியை ஊட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

**சலேசியப் பூஞ்சோலையில் செப்பரீனோ :** சலேசிய ஆயராக இருந்த பேரருட்திரு. கலியேரோ அவர்களையும் தன் பகுதியில் பணியாற்றிய சலேசிய குரு அருட்பணி மிலனேசியோ அவர்களையும் பார்த்துத் தானும் ஒரு சலேசிய குருவாக வேண்டும் என்று எண்ணினார் செப்பரீனோ. அதை தன் ஆசிரியர்களிடம் கூறி வந்தார். தன் இனத்தைச் சார்ந்த பழங்குடி மக்களுக்கு இறைப்பணி செய்து நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்றத் தணியாத் தியாகம் அவரிடமிருந்தது. நான்கு வருடங்கள் அந்த சலேசிய பள்ளியில் படிப்பை முடித்த தருணத்தில் செப்பரீனோவின் உடல்நலம் குன்றி நோய்வாய்ப்பட நேர்ந்தது. இதையறிந்த ஆயர் கலியேரோ அவரை அவருடைய சொந்தப் பகுதிலேயே படிக்க அனுமதித்தார். வியத்மா என்ற இடத்தில் தன் குருமடப் பயிற்சிகளை செப்பரீனோ தொடர்ந்தார்.

1903ம் ஆண்டு வியத்மாவில் இருந்தபோது இவரின் உயிரைக் குடித்த காசநோயின் முதல் அறிகுறிகள் தோன்றியது. தன்னுடைய ஆன்மீகத் தந்தையாக செப்பரீனோ கருதிய ஆயர் கலியேரோ, இவரை 1904ல் இத்தாலிக்கு அனுப்பி வைத்தார். திருத்தந்தை பத்தாம் பத்திநாதரை செப்பரீனோ சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. பலரும் இம்மாணவரின் வாழ்க்கையைக் கண்டு "புனித அலோசியஸ் (ஞானப்பிரகாசர்) மீண்டும் நம்மிடையே இருக்கின்றார்" என்றும் "மற்றுமொரு தோமினிக் சாவியோ" என்றும் பேச ஆரம்பித்தனர். இந்த உணர்வுகளும் பக்தியும் அதிக நாட்கள் நீடிக்கவில்லை. இவ்விளைஞனின் உடல்நலம் குன்றியவாரே இருந்தது. காசநோய் அவரின் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாய் குடித்துக்கொண்டே வந்தது. 11ம் மே 1905ல் அன்பு உள்ளங்கள் சூழ்ந்து நிற்க தன் ஆன்மாவை இறைப்பதம் கையளித்தார்.

**சலேசிய அன்புமுறை கல்விக்கு மற்றுமோர் முன்மாதிரி :** சலேசிய பள்ளியில் நுழைந்த நாள் முதலே தோமினிக் சாவியோவின் வாழ்வை அறிந்து தெளிந்து அவரையே தன் வாழ்வின் முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தவர் செப்பரீனோ. தோமினிக் சாவியோ 15 வயதுகூட நிரம்பாத சிறுவன் அவன் எப்படி இளைஞர்களுக்கு முன்மாதிரியாக இருக்கக் கூடும் என்று தவறான காரணம் கற்பிக்கும் சிலருக்கு செப்பரீனோ ஒரு சவால். தோமினிக் சாவியோவை தன் முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தது மட்டுமல்ல, தானே ஒரு மாபெரும் முன்மாதிரியாய் வாழ்ந்து, 19 வயதிலும் இறைவனுக்கேற்ற வாழ்க்கையை வாழ முடியும் என்று காட்டியவர் நமது செப்பரீனோ என்றால், அது மிகையாகாது. திருஅவை இவரை 2007 நவம்பர் 11ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தியது. எனவே சலேசியர்களின் வழிநடத்துதலில் இளையோர்கள் மட்டுமல்ல, அனைத்து கத்தோலிக்க இளையோர்களின் வாழ்க்கைக்கும் ஒரு அரும்பெரும் முன்மாதிரியாய் செப்பரீனோ

நமுங்க்குராவின் வாழ்வு அமைந்திருக்கிறது, என நாம் மகிழ்ந்து கொண்டாடுவோம். அவரைப்போல நாமும் புனிதப் பாதையில் நடந்திட ஒவ்வொரு நாளும் அவரவர் நிலையில் இறைவனிடம் நம்மையே ஒப்புக் கொடுத்து மன்றாடுவோம்.

## புனித மோனிக்கா தந்த புனித அகுஸ்தினார்

*திரு. விக்டர்*

நமது தாய் திருஅவையில் ஒரு தாயும் மகனும் ஒருசேர புனிதராய் இருப்பது அரிதான ஒன்றாகும். அத்தகைய இருவரான புனித மோனிக்கா பற்றியும் அவரது மகனும் திருச்சபையின் மறைவல்லுநர்களில் ஒருவருமான புனித அகுஸ்தினார் பற்றியும் விவரிக்கிறது இக்கட்டுரை. "உங்களுள் ஒருவர் உண்மையை விட்டு நெறிதவறி அலையும்போது வேறொருவர் அவரை மனந்திரும்பச் செய்தால், தவறான நெறியிலிருந்து மனந்திருப்புகிறவர் அவரை அழிவிலிருந்து மீட்பார் என்பதையும் திரளான பாவங்களைப் போக்குபவர் என்பதையும் தெரிந்துக்கொள்வோம்" (யாக்கோபு 5: 20) என்கிற திருவிவிலிய வசனத்திற்கேற்ப வாழ்ந்தவர் புனித மோனிக்கா அவர்கள். தனது மகன் அகுஸ்தினாரின் மனந்திரும்புதலுக்காக தொடர்ந்து 17 ஆண்டுகள் இடைவிடாது செபித்தும், பல்வேறு முயற்சிகளையும் செய்தும் அவரது மனமாற்றத்திற்காக உழைத்தவர் இவர்.

இவர் கி.பி. 322ல் ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள இன்றைய அல்ஜீரியா நாட்டிலுள்ள "தகாஸ்தே" என்ற ஊரில் கிறிஸ்தவ பக்தியுள்ள தம்பதியருக்குப் பிறந்தவர். இவரது இளமைப்பருவம் குறித்து நமக்குக் குறிப்புகள் கிடைக்கவில்லை. இவர் கடவுள் பக்தியில்லாத ஒருவருக்கு மணமுடித்து கொடுக்கப்பட்டவர். இத்தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் முதலாவதாய் பிறந்தவர்தான் புனித அகுஸ்தினார். இவருக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உண்டு. தந்தை இறைபக்தி இல்லாதவராதலால் குழந்தைகள் மூவருக்கும் திருமுழுக்கு கொடுக்க அனுமதி அளிக்கவில்லை. ஆனால் தாயார் மோனிக்கா அவர்கள் தனது பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ மறையுண்மைகளை அவ்வப்போது போதித்து வளர்த்து வந்தார்.

வளர்ந்து வாலிபனான அகுஸ்தினார் மேற்ப்படிப்புக்காக "கேத்தேஜ்" நகருக்குச் சென்றார். அங்கு மனம்போன போக்கில் வாழ ஆரம்பித்தார்."மாணிக்கேயிசம்" என்கிற தவறான கொள்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு ஒன்பது ஆண்டுகள் தன்னை மறந்து வாழ்ந்தார். வாலிப வயதில் எல்லா தவறுகளுக்கும் ஆளானார். இக்காலக்கட்டங்களில் இவரது மனமாற்றத்திற்காக அயராது இவர் அன்னை தொடர்ந்து செபித்து வந்தார்.

கடவுள் நமது செபங்களுக்கு பலவிதங்களில் செவிசாய்கிறார். முதலாவது உடடியாகப் பதில் தருகிறார். இரண்டாவதாக காலம் தாழ்த்தி பதில் தருகிறார்.

மூன்றாவதாக நாம் கேட்பதற்கும் பதில் வேறொன்றைத் தருகின்றார். புனித மோனிக்கா அவர்கள் பொறுமையாக ஆண்டவரின் சித்தத்தின்படி தனது மகனின் மனமாற்றத்திற்காக சோர்ந்து போகாமல் செபித்து வந்தார். அதுமட்டுமல்லாது தனது கணவரும், அவரது மரணத்திற்கு முன்பதாக மனந்திருந்தி திருமுழுக்குப் பெறவேண்டுமெனவும் செபித்து வந்தார். இவரது முயற்சியின் பலனாகவும் இவரது கண்ணீரின் செபத்தையும் ஆண்டவர் கண்டார். எசேக்கியா மன்னனின் கண்ணீருக்கு பதிலளித்த ஆண்டவர் (எசா. 38:5). ஆகாரின் கண்ணீருக்கு பதிலளித்த ஆண்டவர் (தொ.நூ.21:17) அன்னாளின் கண்ணீருக்கு பதிலளித்த ஆண்டவர் (1சாமு 1: 11) மோனிக்காவின் கண்ணீருக்குப் பதிலளித்தார். அவரது கணவர் மனம்மாறி திருமுழுக்குப்பெற்று கிறிஸ்தவரானார். மகன் அகுஸ்தினாரும் தனது 32வது வயதில் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவரானார். புனித மோனிக்கா அவர்களின் செபவாழ்வுக்கும், கடவுள்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு உறுதுணையாக இருந்து உற்சாகப்படுத்தியவர் மிலான் நம் ஆயர் புனித அம்புரோசு ஆவார்.

கணவரின் மனமாற்றத்தினாலும் மகனின் மனமாற்றத்தினாலும் நிம்மதியடைந்த புனித மோனிக்கா அவர்கள் தனது 56வது வயதில் கி.பி. 387 ஆகஸ்ட் 27ம் நாள் ஆண்டவருக்குள் மரித்தார். அகுஸ்தினாரின் கனவில் தோன்றிய ஒரு சிறுவன் அருகிலிருந்த திருவிவிலியத்தைக் காட்டி "எடுத்து வாசி" என்று மூன்று முறை சொன்னான். இந்த கனவுதான் அவர் குருவாக வேண்டும் என்ற விருப்பத்தை உண்டாக்கியது. அக்கனவில் அவர் எடுத்து வாசித்த திருவிவிலியப் பகுதி உரோ. 13:12ல் உள்ள "இரவு முடியப்போகிறது, பகல் நெருங்கிவிட்டது. ஆகவே, இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்துக் கொள்வோமாக" இந்த வார்த்தைகளின்படி வாழ ஆரம்பித்தார். தனது 36வது வயதில் குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார். சாதாரணமான குருவாக இல்லாமல் திருச்சபையின் மறைவல்லுநராக உயர்ந்தார். கி.பி. 396ல் ஆண்டு "ஹிப்போ" நகருக்கு ஆயராக உயர்த்தப்பட்டார். எளியவர்களைக் குப்பை மேட்டிலிருந்து கைதூக்கி விடுகிற ஆண்டவர் (திபா. 113:7) புனித அகுஸ்தினாரை மிகச்சிறந்த ஆயராக உயர்த்தினார்.

புனித அகுஸ்தினார் திருவிவிலியத்திற்கு அநேக விளக்கவுரைகள் வழங்கியுள்ளார். 500க்கும் மேற்பட்ட விளக்கவுரைகளையும் 200க்கும் மேற்பட்ட கடிதங்கள் வாயிலாக திருச்சபையை நிலைத்து நிற்க உதவினார். "வாழ்க்கையை இறைவார்த்தையின்படி வாழவேண்டும்" என்று வலியுறுத்தினார். "உன் வாழ்வுக்கு நீதான் பொறுப்பு என்பது அவரது பாடம்" "அருட்சாதன வாழ்வில் கிறிஸ்துவே முதல் அருட்சாதனம்" என்று விளக்கினார். திருஇசைக்கு அதிமுக்கியத்துவம் வழங்கினார். "ஒருமுறை பாடுவது இருமுறை செபிப்பதற்கு சமம்" என்பது இவரது அனுபவபாடம். இன்றைக்கு குருக்கள் சொல்லும் "திருப்புகழ்மாலையை" உருவாக்கி வழங்கியவர் புனித அகுஸ்தினார். இந்த செபமானது காலை, மதியம், மாலை,

இரவு என நான்கு வேளைகளிலும் சொல்லக்கூடிய செபமாகும். இதை எல்லா மக்களும் சொல்ல வேண்டும் என்பது அவரது விருப்பமாகும்.

அவர் எழுதிய "The City of God” என்கிற நூலும், ‘The confession’ என்கிற நூலும் மிகப் பிரபலமானவை. “the confession” பாவ ஒப்புதல் என்கிற தனது புத்தகத்தில், தான் எவ்வாறு பாவ வாழ்விலிருந்து மீண்டார் என்பதை விவரித்துள்ளார். இவரது இந்த புத்தகங்கள் அநேகருடைய வாழ்வை மாற்றியமைத்துள்ளது. திருச்சபை இவரை “மறைவல்லுநர்” என்று போற்றி மகிழ்கிறது. கடவுளின் ஒவ்வொரு மனித படைப்பிற்குள்ளும் ஆண்டவரின் ஆற்றல் அடங்கியுள்ளது. கடவுளின் ஆவிக்குரிய அலை வரிசையோடு நமது ஆவிக்குரிய அலைவரிசை இணையும்பொழுது புனித அகுஸ்தினார் பிறக்கிறார்கள். இவ்வளவு சிறப்பு மிக்க புனித அகுஸ்தினார் கி.பி. 430, ஆகஸ்ட் 28ம் நாள் இறைவனடி இணைந்தார். அந்நாளை அவரது திருவிழா நாளாக திருஅவை சிறப்பிக்கிறது. புனித மோனிக்கா, புனித அகுஸ்தினார் இருவரும் நமது ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டிகளாக, நம்பிக்கையின் அடையாளங்களாக விளங்குகின்றனர். நமது விசுவாச வாழ்வுக்கு இவர்களது வாழ்வு வழிகாட்டுவதாக, வளமூட்டுவதாக ஆமென்.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

**திருஅவையின் ஒரு பகுதியாக நாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம்**

வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் பெரு நாட்டு இளைஞர்களைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், இளைஞர்களுக்கான யூபிலி ஆண்டினை முன்னிட்டு உரோமிற்குத் திருப்பயணிகளாக வந்திருக்கும் இளைஞர்கள் அனைவரையும் வாழ்த்தினார்.இன்றைய நற்செய்தியில் குறிப்பிடப்படும் கடுகுவிதை, புளிப்பு மாவு ஆகிய இரண்டும் வாழ்க்கையானது மாற்றமடையக் கூடியது, வளரக் கூடியது, எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அதற்காக பணியாற்றக்கூடியது என்பதை வலியுறுத்துகின்றன என்று கூறினார் திருத்தந்தை.

**இடம் - புலம்பெயர்ந்தோரும் நம்பிக்கையின் மறைப்பணியாளர்கள்**

இவ்வாண்டு அக்டோபர் மாதம் 4 மற்றும் 5-ஆம் தேதிகளில் சிறப்பிக்கப்படவிருக்கிற, 111-வது உலக இடம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்தோர் நாளுக்காக, ஜூலை 25, வெள்ளிக்கிழமையன்று வழங்கியுள்ள செய்தியில் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் திருத்தந்தை.இன்றைய உலகளாவிய நெருக்கடிகளான போர்கள், காலநிலை மாற்றம் மற்றும் சமத்துவமின்மையின் பின்னணியில், நம்பிக்கை, இடம்பெயர்வு மற்றும் பணிக்கு இடையேயான ஆழமான தொடர்பை தனது செய்தியில் வெளிப்படுத்தியுள்ள திருத்தந்தை, அவை இலட்சக்கணக்கான மக்களை

இடம்பெயர்ந்து செல்ல கட்டாயப்படுத்துகின்றன என்றும் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் இத்தகையப் பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைந்துள்ள சுயநல மனப்பான்மைகளையும் ஆயுதப் போட்டியையும் கண்டித்துள்ள திருத்தந்தை, இதற்குப் பதிலாக உலகளாவிய ஒன்றிப்பை வளர்க்க வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

**வளர்ச்சி பெறாத நாடுகள் சார்பாக ஐ.நா.வில் திருப்பீடம்**

வளர்ந்துவரும் சிறியத் தீவு நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள் மற்றும் வளர்ச்சி பெறாத நாடுகள் குறித்து ஐ.நா.விற்கானத் திருப்பீடப் பிரதிநிதி, பேராயர் காச்சா எடுத்துரைத்துள்ளார். வறுமையின் எதார்த்தம் என்பது, கோடிக்கணக்கான மக்களைத் தொடர்ந்து துன்புறுத்தி, அவர்களின் நல்வாழ்வை பாதித்து, கடவுள் கொடுத்த மாண்பைக் குறைமதிப்பிற்கு உள்ளாக்குவது என்றும், அதேவேளை அவர்களின் ஒருங்கிணைந்த மனித வளர்ச்சியை இந்த வறுமை நிலை தடுக்கிறது என்றும் பேராயர் காச்சா கூறியுள்ளார். பன்னாட்டு அமைப்பு வறுமையை ஒழிப்பதில் கவனம் செலுத்தும் என்று திருப்பீடம் நம்புவதாகத் தெரிவித்துள்ளார். பெரும்பான்மையான வளர்ந்து வரும் நாடுகள் தங்களால் தாங்க இயலாதக் கடன்களை செலுத்தவே போராடுகின்றன என்று கூறிய பேராயர் காச்சா அவர்கள், கடன்தீர்வே எல்லாவற்றிற்கும் தீர்வாகாது என்றும், வளரும் நாடுகளின் எதிர்கால வளர்ச்சியை மாற்றக்கூடிய வல்லமையைக் கொண்டுள்ளது என்றும் உரைத்துள்ளார். இறுதியாகத் திருத்தந்தை அவர்களின் வார்த்தைகளை மேற்கோள்காட்டி, திருஅவையில் கொண்டாடப்படும் இந்த யூபிலி ஆண்டு, அநியாயமாகத் திரட்டப்பட்ட செல்வங்களை மீட்டெடுத்து, மறுப்பகிர்வு செய்வதன் வழியாக தனிப்பட்ட மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு நம்மை அழைக்கிறது என்றும் எடுத்துரைத்துள்ளார்.மேலும், வளர்ந்து வரும் நாடுகளின் கடன்சுமையை எதிர்கொள்ள உடனடி நடவடிக்கைகள் தேவை என்றும் வலியுறுத்தியுள்ளார் பேராயர் கபிரியேலே காச்சா.

**புனிதர்பட்ட படிநிலைகளுக்கான பெயர்கள் பரிந்துரை**

திருப்பீடத்தில் புனிதர் பட்ட படிநிலைகளுக்கான திருப்பீடத்துறையின் தலைவர் கர்தினால் மர்ச்செல்லோ செமராரோ அவர்கள், இப்பெயர்களை திருத்தந்தையிடம் சமர்ப்பிக்க, அவ்விவரங்களை ஏற்றுக்கொண்டு படிநிலைகளைத் தொடர ஒப்புதல் வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.1816ஆம் ஆண்டு பிறந்து 1889ல் உயிரிழந்த இஸ்பானிய நாட்டு மறைமாவட்ட அருள்பணி Salvador Valera Parra, இஸ்பெயினில் 1936க்கும் 38க்கும் இடையில் மறைசாட்சியாகக் கொல்லப்பட்ட Manuel Izquierdo Izquierdo மற்றும் 58 உடனுழைப்பாளர்கள், 1936க்கும் 37க்கும் இடைப்பட்டக் காலத்தில் அதே ஆண்டில் மறைசாட்சியான மறைமாவட்ட அருள்பணி Antonio Montañés Chiquero மற்றும் அவரின் 64 உடனுழைப்பாளர்கள், 1944க்கும் 45க்கும் இடைப்பட்டக் காலத்தில் விசுவாசத்திற்காக கொல்லப்பட்ட மறைமாவட்ட அருள்பணி Raimond Cayré, பிரான்சிஸ்கன் துறவி Gerard Martin Cendrier, குருமட மாணவர் Roger Vallée, பொதுநிலையினர் Jean

Mestre மற்றும் 46 உடனுழைப்பாளர்கள் குறித்த விவரங்கள் திருத்தந்தையின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், தங்கள் வீரத்துவ பண்புகளுக்காக மூன்று இத்தாலிய இறையடியார்களின் பெயர்களும், ஒரு பிரசில் இறையடியாரின் பெயரும் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**கடவுளால் இணைக்கப்படும் திருஅவையின் வலையமைப்பு**

திருப்பீடத்தின் நற்செய்தி அறிவிப்புப்பணித் துறையும், சமூகத் தொடர்புத் துறையும் இணைந்து இளையோருக்கான யூபிலியின் ஒரு பகுதியாக, இணைய வழியில் மறைப்பணியாற்றும் அனைவரையும் இன்றாக இணைத்து செபிக்கவும், இந்த யூபிலியைக் கொண்டாடவும் அழைத்துள்ளது. உரோமையில் உள்ள கொன்சிலியாசியோனே கலையரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வின் தொடக்கவிழாவில் உரையாற்றிய திருப்பீடச் சமூகத் தொடர்புத் துறையின் தலைவர் முனைவர் பவுலோ ருபினி அவர்கள், இணைய வழியில் மறைப்பணியாற்றும் அனைவரையும் நேரில் சந்திப்பது ஓர் அழகிய தருணம் என்றும், இணைய தளங்கள் நம்மை ஒன்றிணைக்கும் அதே வேளை, உண்மையில் நம்மை பிணைப்பது வலையமைப்பு அல்ல, மாறாக இறைவனே நம்மை ஒன்றிணைக்கிறார் என்றும் குறிப்பிட்டார். இணையம் செயல்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே திருஅவை ஒரு "வலையமைப்பாக" இருந்து வருகிறது என்பதையும், இந்த வலையமைப்பு தற்போதுள்ள வலையமைப்பின் குறியீடுகளால் ஆனதல்ல, மாறாக திரு அவையின் வலையமைப்பு பலவீன மனிதர்களால் ஆனது மற்றும் பன்முகத்தன்மையுடையது என்றும் உரைத்தார். இணைய வழியில் மறைப்பணியாற்றும் போது சுய விளம்பரம் தவிர்த்து, பணிவுடன் மறைபணியில் ஈடுபட வேண்டுமென்றும் வலியுறுத்தினார் முனைவர் ருஃபினி.மேலும், இணைய வழியில் மறைப்பணியாற்றும் அனைவரும் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கையில் கவனம் செலுத்தாமல், இக்காலத்தில் மறைப்பணியை ஆற்றும் இயேசுவின் சீடராக இருக்கவேண்டும் என வலியுறுத்தினார் முனைவர் பவுலோ ருஃபினி.இதே கூட்டத்தில் உரையாற்றிய திருப்பீடச் செயலர், கர்தினால் பியத்ரோ பரோலின் அவர்கள், தவறான தகவல், வேறுபாடு, தனிமை போன்றவை இணையத்தில் ஆதிக்கம் செலுத்தும் இக்காலத்தில், இணையவழியில் மறைப்பணியாற்றும் ஒவ்வொருவரும் இதிலிருந்து வேறுபட்டு கிறிஸ்துவின் ஒளியாகச் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.விசுவாசத்திலும் அன்பிலும் இணையத்தில் பகிரப்படும் ஒரு சிறிய பதிவு கூட இறையருளின் தீப்பொறியாக மாறும் என்றும், மக்களிடயே இணைய வழியில் தாக்கத்தை ஏற்படுத்துவோர் இறைவார்த்தையிலும், இறைவேண்டலிலும், அருளடையாளங்களிலும் வேரூன்றி, ஆற்றலைப் பெறவும் ஊக்குவித்தார் கர்தினால் பரோலின்.

## சுடர் வாசகர் போட்டி - 124 சரியான விடைகள்

1. 1857 மார்ச் 9ம் நாள்
2. புனித மரிய மசரெல்லோ
3. தங்கச் சுரங்கம்
4. மத்தியாஸ்
5. புனித மரிய மசரெல்லோவை
6. காசியா நகர் புனித ரீத்தா
7. திருத்தந்தை 7ம் பத்திநாதர்
8. ஒவ்வொரு சொல்லிற்கும் செயலிற்கும் உயிர்ப்பு தேவை.
9. 60 குருக்களைத் தேர்ந்தெடுத்தார்கள்
10. புனித சூசையப்பர்
11. ஜோசப் கொவால்ஸ்கி
12. 1922ம் ஆண்டில் "பாப்டிஸ்ட் மிஷனரி சொசைட்டி" என்ற அமைப்பினர்
13. இஸ்பானிய கட்டிடக் கலைஞர் அந்தோனி கௌத்
14. செப்டம்பர் 18, 1814ம்
15. இயேசு பேதுருவிடம்

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

1. திரு. ஆலன் ருஸ்கின், பெங்களூர்
2. திருமதி. எட்வின் சோபியா, விழுப்புரம்
3. திரு. அருளப்பன், வேலூர்

# சுடர் வாசகர் போட்டி - 125

1. "புனிதராவதற்கான எல்லா தகுதியும் இவரிடம் காணப்பட்டன," யார் யாரிடம் கூறியது?
2. உண்மையான கிறிஸ்தவ சுதத்திரத்தின் ஒளியாக திகழ்ந்தவர் யார்?
3. நாம் கிறிஸ்துவோடு இணைந்து உயிர்பெற்றதன் அடையாளம் எதைக் குறிக்கிறது?
4. திருஅவையை வழிநடத்த கடமையும், பொறுப்பும் யாருக்கு அதிகம் இருக்க வேண்டும்?
5. அன்னையின் காட்சியையும், வேண்டுதலையும் திருத்தந்தை யாரிடம் தெரிவித்தார்?
6. "தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள், தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்" என்று எந்நூலில் எழுதப்பட்டுள்ளது?
7. "வாழ்க அரசியே" என்று தொடங்கும் லத்தீன் செபத்தை (கிருபைதயாபத்து மந்திரத்தை) இயற்றியது யார்?
8. 2008ம் ஆண்டு நவம்பர் 8ம் நாள் "கடவுளின் ஊழியர்" என்று யாரை அழைத்தனர்?
9. அகுஸ்தின் எந்த வயதில் மனமாற்றமடைந்து, கிறிஸ்துவாகி, பின்னர் ஆயரானார்?
10. புனித மோனிக்கா எந்த வயதில், எந்த ஆண்டு மரித்தார்?
11. இயேசுவின் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்தி திருமுழுக்குக் கொடுத்தவர் யார்?
12. 2008ம் ஆண்டு நவம்பர் 8ம் நாள் "கடவுளின் ஊழியர்" என்று அழைக்கப்பட்டவர் யார்?
13. விண்ணேற்பு அன்னைக்கு எந்த நூற்றாண்டிலிருந்து விழா எடுக்க ஆரம்பித்தனர்?
14. செப்பரீனோ நமுங்க்குரா எவ்வாறு தன் வாழ்வில் நடந்துக் கொண்டார்?
15. "அருட்சாதன வாழ்வில் கிறிஸ்துவே முதல் அருட்சாதனம்" என்று விளக்கியது யார்?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.200/- செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

பெயர்: ..................................
முகவரி: ..................................
..................................
..................................
..................................

## அடுத்த சுடரில்

## பகுதி 1 : வழிபாட்டு வழிக்காட்டி

புனித பெரிய கிரகோரி
புனித அன்னை தெரேசா – கன்னியர் மற்றும் ஆசிரியர் தினவிழா
பொதுக்காலம் 23ஆம் – ஞாயிறு
தூய கன்னி மரியாவின் பிறப்பு (ஆரோக்கிய அன்னை)
மரியாவின் திருப்பெயர்
புனித யோவான் கிறிசோஸ்தோம் – ஆயர்
திருச்சிலுவையின் மகிமை
புனித மரியாவின் துயரங்கள் (தூய வியாகுல அன்னை)
புனிதர்கள் திருத்தந்தை கொர்னேலியு, ஆயர் சிப்பிரியன் – மறைச்சாட்சியர்
புனித சனுவாரியு – ஆயர், மறைச்சாட்சி
பொதுக்காலம் 25ஆம் வாரம் – ஞாயிறு
புனித பியோ, மறைப்பணியாளர்
புனிதர்கள் கோஸ்மாஸ், தமியான் – மறைச்சாட்சியர்
பொதுக்காலம் 26ஆம் வாரம் – ஞாயிறு
புனித வின்சென்ட் தே பவுல் – மறைப்பணியாளர்
தூய மிக்கேல், கபிரியேல், ரபேல் – அதிதூதர்கள் விழா
புனித எரோணிமுஸ் (ஜெரோம்) – மறைப்பணியாளர், மறைவல்லுநர்

## பகுதி 2 : நம்பிக்கையில் வளர ...

அருள்மிகப் பெற்றவளே வாழ்க

ஆசிரியர் தினத்தில் விழாக்காணும் புனித அன்னை தெரேசா

அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரது குழுவினர்

திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறைந்த வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஆகஸ்ட் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஆகஸ்டு மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | அல்போன்ஸ் மரிய லிகோரி மற்றும் புனித பீட்டர் ஜீலியன் எய்மார்ட் | லேவி. 23: 1,4-11,15-16,27, 34-38 | மத். 13: 54-58 |
| 2 | ச | வெர்செல்லி நகர் புனித யுசேபியு | லேவி. 25: 1,8-17 | மத். 14: 1-12 |
| 3 | **ஞா** | **பொதுக்காலம் 18ம் ஞாயிறு** | ச.உ. 1: 2, 2:21-23<br>கொலோ. 3: 1-5, 9-11 | லூக். 12: 13-21 |
| 4 | தி | புனித ஜான் மரிய வியான்னி | எண். 11: 4-15 | மத். 14: 13-21 |
| 5 | செ | தூய கன்னிமரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு (பனிமய அன்னை) | யோவா. 21: 1-5 | லூக். 11: 27-28 |
| 6 | பு | ஆண்டவரின் தோற்ற மாற்றம் விழா | தானி. 7: 9-10, 13-14 | லூக். 9: 28-36 |
| 7 | வி | புனித கயத்தான் மறைப்பணியாளர் | எண். 20: 1-13 | மத். 16: 13-23 |
| 8 | வெ | புனித தோமினிக் மறைப்பணியாளர் | இச. 4: 32-40 | மத். 16: 24-28 |
| 9 | ச | திருச்சிலுவையின் புனித தெரெசா பெனடிக்டா | இச. 6: 4-13 | மத். 17. 14-20 |
| 10 | **ஞா** | **பொதுக்காலத்தின் 19ம் ஞாயிறு** | **I.** சாஞா. 18: 6-9<br>**II.** எபி. 11: 1-2 | லூக். 12: 35-40 |
| 11 | தி | புனித கிளாரா கன்னியர் | இச. 10: 12-22 | மத். 17: 22-27 |
| 12 | செ | சாந்தால் நகர் புனித ஜான் பிரான்சிஸ்கா | இச. 31: 1-8 | மத். 18: 1-5, 10-14 |
| 13 | பு | புனிதர்கள் திருத்தந்தை போன்சியானு, இப்போலித்து | இச. 34: 1-12 | மத். 18: 15-20 |
| 14 | வி | புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே | யோசுவா 3: 7-10,11,13-17 | மத். 18: 21-19: 1 |
| 15 | வெ | **தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா** | **I.** யோவா. 11:19,12:1-6,10<br>**II.** 1கொரி. 15: 20-26 | லூக். 1: 39-56 |
| 16 | ச | அங்கேரி புனித ஸ்தேவான் | யோசுவா 24: 14-29 | மத். 19: 13-15 |
| 17 | **ஞா** | **பொதுக்காலத்தின் 20ம் ஞாயிறு** | **I.** எரே. 38: 4-6, 8-10<br>**II.** எபி. 12: 1-4 | லூக். 12: 49-53 |
| 18 | தி | | நீத. 2: 11-19 | மத். 19: 16-22 |
| 19 | செ | புனித ஜான் யூட்ஸ் | நீத. 6: 11-24 | மத். 19: 23-30 |
| 20 | பு | புனித நார்பட் அதீனத் தலைவர் | நீத. 9: 6-15 | மத். 20: 1-16 |
| 21 | வி | புனித பத்தாம் பயஸ் | நீத. 11: 29-39 | மத். 22: 1-14 |
| 22 | வெ | அரசியான கன்னி மரியா | ரூத்து 1: 1,3-6, 14-16,22 | மத். 22: 34-40 |
| 23 | ச | லீமா நகர் புனித ரோசா | ரூத்து 2: 1-3,8-11,4: 13-17 | மத். 23: 1-12 |
| 24 | **ஞா** | **பொதுக்காலத்தின் 21ம் ஞாயிறு** | எசா. 66: 18-21<br>எபி. 12: 5-7, 11-13 | லூக். 13: 22-30 |
| 25 | தி | கலசான்ஸ் நகர் புனித யோசேப்பு | 1தெச. 1: 1-5, 8-10 | மத். 23: 13-22 |
| 26 | செ | | 1தெச. 2: 1-8 | மத். 23: 23-26 |
| 27 | பு | புனித மோனிக்கா | 1தெச. 2: 9-13 | மத். 23: 27-32 |
| 28 | வி | புனித அகுஸ்தின் ஆயர் | 1தெச. 3: 7-13 | மத். 24: 42-51 |
| 29 | வெ | புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள் | 1தெச. 4: 1-8 | மாற்கு 6: 17-29 |
| 30 | ச | புனித யூப்ரேசியா கன்னியர் | 1தெச. 4: 9-11 | மத். 25: 14-30 |
| 31 | **ஞா** | **பொதுக்காலத்தின் 22ம் ஞாயிறு** | சீராக் 3:17-18,20, 28-29<br>எபி. 12: 18-19, 22-24 | லூக். 14: 1, 7-14 |

## வாசகர்கள் கவனத்திற்கு



அன்புள்ள சந்தாதாரர்களே,

மாதந்தோறும் அச்சிடப்பட்டு
உங்கள் கைகளில் தவழ்ந்த
தீபகச் சுடர் மாத இதழ் அடுத்த மாதம் முதல்
இணையதளத்தில் இ-புத்தகமாக மட்டுமே
வெளியிடப்படுவதால்
அச்சுப் பிரதி நிறுத்தப்படுகிறது
என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே உங்கள் வாட்சப் எண்ணை
எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்து
வழக்கம்போல "சுடர்" மாத இதழை
இனி PDF தரத்தில் பெற்றுக்கொள்ள
அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

செப்டம்பர் 2025 முதல் இணையத்தில் மட்டுமே வெளிவரும்

+91 9385201453



சிறார்களின்
திருவிருந்துக்கான
மறைக்கல்வி

Catechism for First Holy Com

இப்போது விற்பனையில்



சிறார்களின்
உறுதிப்பூசுதலுக்கான
மறைக்கல்வி

Catechism for
Sacrament of Confirmation

+91 9385201453 deepagamdonbosco

சென்னை
சலேசிய மாநிலம்

தீபகம் தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமிய
கல்வி மையம்

தொன் போஸ்கோ
இளைஞர் இயக்ககம்

தொன் போஸ்கோ
இளைஞர் மையம்
எண்ணூர்

இணைந்து நடத்தும்

# கலைவழி இறைமொழி

## ஆளுமைத்திறன்
## நாடகப் பயிற்சிப் பட்டறை



**நாள்**
**15.08.2025 - 17.08.2025**
**(3 நாட்கள்)**

இரண்டு நாள் பயிற்சிக்கு பின் மூன்றாம் நாள்
ஒரு முக்கிய இடத்தில் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

**இடம்**
**தொன் போஸ்கோ மையம்**
**எண்ணூர், சென்னை**

மேலும் விபரங்களுக்கு :
திரு. சாண்டோ 9840263623

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10